
# முப்பது சில்லரைக் கோர்வை



நா.. விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முப்பது
# சில்லரைக் கோர்வை



சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவார்
சிவ சிவ என்னச் சிவகதிர் தானே.


தொகுப்பாளர்:

கலாபூசணம். நாகமணி விநாயகமூர்த்தி

சேனைக்குடியிருப்பு



15.05.2014

விலை 30





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | நடராஜப்பத்து | 03 - 06 |
| 02. | பரமசிவன் தோத்திரம் | 07 - 08 |
| 03. | அவனாசிப்பத்து | 09 - 11 |
| 04. | அருணாசலீசர் பதிகம் | 11 - 13 |
| 05. | உண்ணாமுலையம்மன் பதிகம் | 14 - 15 |
| 06. | வேமனானந்தசுவாமி பதிகம் | 16 - 20 |
| 07. | ஸ்ரீராமர் தோத்திரம் | 21 - 24 |
| 08. | ஸ்ரீராமர் பதிகம் | 25 - 28 |
| 09. | கெருடப் பத்து | 29 - 31 |
| 10. | கஜேந்திர மோட்சக் கீர்த்தனை | 32 - 33 |
| 11. | தனியன்கள் | 34 - 34 |
| 12. | திருநாமப்பதிகம் | 35 - 37 |
| 13. | திருநீற்றுப் பதிகம் | 38 - 41 |
| 14. | சுப்பிரமணியர் விருத்தம் | 42 - 45 |
| 15. | சனிபகவான் தோத்திரம் | 46 - 49 |
| 16. | நவக்கிரக தோத்திரம் | 50 - 51 |
| 17. | கோளறு திருப்பதிகம் | 52 - 54 |
| 18. | ஆறுமுகசுவாமி பேரில் | 55 - 56 |
| 19. | ஆறுமுகசுவாமி ஆசிரிய விருத்தம் | 57 - 58 |
| 20. | தணிகாசலர் பஞ்சரத்தினம் | 59 - 60 |
| 21. | ஆறுமுகசுவாமி பஞ்சரத்தினம் | 60 - 62 |
| 22. | சண்முகக் கடவுள் பஞ்சரத்தினம் | 62 - 63 |
| 23. | காமாட்சியம்மன் விருத்தம் | 63 - 66 |
| 24. | வடிவுடையம்மன் விருத்தம் | 67 - 70 |
| 25. | மீனாட்சியம்மன் விருத்தம் | 71 - 74 |
| 26. | துரோபதையம்மன் விருத்தம் | 75 - 80 |
| 27. | சூரிய நமஸ்காரப் பதிகம் | 80 - 84 |
| 28. | ஆதிமூலப்பத்து | 85 - 87 |
| 29. | கரியமால் நாமப் பதிகம் | 88 - 90 |
| 30. | அரிராமர் பதிகம் | 91 - 92 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நடராஜப்பத்து

## காப்பு

**அரிகரி நமச்சிவாயன் ஆழ்கடல் துயிலும் மாயன்**
**சிவஸ்ரீ முருகன் சக்தி தினம்வரும் சூரியனார் - கோள்கள்மீது**
**முப்பது கோர்வைப் பாடல் முடிவுறப் படிப்பதற்கு**
**மத்தக களிற்று வேழ மதகரி காப்புதானே.**

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ மறை நான்கின் அடி முடியும் நீ, மதியும் நீ ரதியும் நீ புனலும் நீ அனலும் நீ, மண்டலமிரண்டேழும் நீ, பெண்ணும் நீ, ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ பிறவும் நீ ஒருவன் நீயே, பேதாதிபேதம் நீ பாதாதி கேசம் நீ பெற்ற தாய் தந்தை நீயே, பொன்னும் நீ பொருளும் நீ, இருளும் நீ ஒளியும் நீ போதிக்க வந்த குரு நீ, புகழொணாக் கிரகங்களொன்பதும் நீ யிந்த புவனங்கள் பெற்றவனும் நீ, எண்ணரிய ஜீவகோடிகளின் றப்பனே என் குறைகளார்க் குரைப்பேன், ஈசனேசிவகாமி நேசனே யெனை யீன்ற தில்லை வாழ் நடராஜனே. 1

மானாட மழுவாட மதியாட புனலாட மங்கை சிவ காமியாட, மாலாட,நூலாட மறையாட திறையாட மறைதந்த பிரமனாட, கோனாட, வானுலகு கூட்ட மெல்லாமாட, குஞ்சரமுகத்தனாட, குண்டலமிரண்டாட தண்டைபுலி யுடையாட குழந்தை முருகேசனாட, ஞானசம்பந்தரோடு யிந்திராதி பதினெட்டு முனியட்ட பாலகருமாட, நரை தும்பை யறுகாட நந்திவாகனமாட நாட்டியப் பெண்களாட வினையோட உனைப்பாட யெனை நாடி யிதுவேளை விருதோடு ஆடி வருவாய், ஈசனே சிவகாமி நேசனே யெனை யீன்ற தில்லைவாழ் நடராஜனே.

2

கடலென்ற புவிமீதில் அலையென்றவுருகொண்டு கனவென்ற வாழ்வை நம்பி, காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே கட்டுண்டு நித்த நித்தம், உடலென்ற கும்பிக்கு உணவென்ற யிரைதேடி ஓயாமலிரவு பகலும், உண்டுண்டுறங்குவதைக் கண்டதே யல்லாது ஒருபயனடைந்திலேனே, தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனும் தாபரப் பின்னலிட்டு தாயென்று சேயென்று நீ என்று நானென்று தமியனை யிவ்வண்ணமாய், இடையென்று கடைநின்று யேனென்று கேளா திருப்பதுன்னழகாகுமோ யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லை வாழ் நடராஜனே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 வம்பு சூன்யமல்ல வைப்பல்ல மாரணந் தம்பனம் வசியமல்ல, பாதாள வஞ்சனம் ப்பிரகாயப் பிரவேசமதுவல்ல ஜாலமல்ல, அம்பு குண்டுகள் விலக மொழியுமந்திர மல்ல ஆகாய குளிகையல்ல. அன்போடு செய்கின்ற வாத மோடிகளல்ல, அரிய மோகனமுமல்ல, கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி கொங்கணர் புலிப்பாணியும், கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாங் கூறிடும் வைத்தியமல்ல, என் மனதுன்னடிவிட்டு நீங்காது நிலை நிற்க யேதுளவு புகலவருவாய், ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே.

5 நொந்து வந்தேனென்று ஆயிரஞ்சொல்லியும் செவியென்ன மந்தமுண்டோ, நுட்ப நெறி யறியாத பிள்ளையைப் பெற்றபின் நோக்காத தந்தையுண்டோ, சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடித்த பின் தளராத நெஞ்சமுண்டோ, தந்திமுகனறு முகன் இரு பிள்ளை யில்லையோ தந்தை நீ மலடு தானோ விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே வினையொன்று மறிகிலேனே, வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே வேடிக்கை யிதுவல்லவோ, இந்த வுலகீரேழு மேனளித்தாய் சொல்லு இனியுன்னை விடுவதில்லை, யீசனே சிவகாமி நேசனே யென்னை யீன்ற தில்லைவாழ் நடராஜனே.

6 வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும் உன் வாஞ்சை யில்லாத போதிலும், வாலாயமாய் உன் கோயில் சுற்றாத போதிலும் வஞ்சமே செய்த போதிலும், மொழியெதுகை மோனை யில்லாமலே பாடினும் மூர்க்கனே முகடாகினும், மோசமே செய்யினும் தேசமே கவரினும் முழுகாமியே யாகினும், பழியெனக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ பார்த்தவர்கள் ளேசார்களோ, பாரறிய மனைவிக்கு பாதியுடலீந்த நீ பாலனைக்காக்கொணாதோ, யெழில் பெரிய அண்டங் களடுக்கா யமைத்த நீ யென்குறைகள் தீர்த்தல் பெரிதோ, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லை வாழ் நடராஜனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 அன்னை தந்தைகளென்னை யீன்றதற் கழுவனோ அறிவிலாததற்க்கழுவனோ, அல்லாமல் நான் முகன் தன்னையே நோவனோ ஆசை மூன்றுக்கழுவனோ, முன்பிறப் பென்னவினை செய்த னென்றழுவனோ என் மூடறிவுக் கழுவனோ, முன்னிலென் வினை வந்து மூளுமென்றழுவனோ முத்திவருமென்றுணர்வனோ, தன்னை நொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ.தவமென்னவென்றழுவனோ, தையலர்கழுவனோ மெய் வளர்க்கழுவனோ தரித்திர திசைக்கழுவனோ, இன் மென்னப்பிறவி வருமோவென வென்றழுவனோ யெல்லாமுரைக்க வருவாய், யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே.

8 காயாமுன் மரமீது பூபிஞ் சறுத்தனோ, கன்னியர்கள் பழிகொண்டனோ, கடனென்று பொருள் பறித்தே வயிறெரித்தனோ, கிளை வழியில் முள்ளிட்டனோ, தாயாருடன் பிறவிக்கென்னவினை செய்தனோ, தந்த பொருளிலை யென்றனோ தானென்று கெர்வித்து கொலைகளவு செய்தனோ, தவசிகளையேசினனோ, வாயாரப் பொய் சொல்லி வீண்பொருள் பறித்தேனோ, வானவரை பழித்திட்டனோ வடிவு போலே பிறரை சேர்க்க லடித்தனோ வந்த பின் என் செய்தனோ, ஈயாத லோபி யென்றே பெயரெடுத்தனோ யெல்லாம் பொருத்தருள்வாய் யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே.

தாயா ரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன தன் பிறவி யுறவுகோடி, தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன, தாரணியை யாண்டுமென்ன, சேயர்களிருந்தென்ன, குருவாயிருந்தென்ன, சீஷர்களிலிருந்து மென்ன, சித்து பல கற்றென்ன, நித்தமும் விரதங்கள் செய்தென்ன நதிகளெல்லாம் ஓயாது மூழ்கினும் என்ன பலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமனோலை ஒன்றைக் கண்டு தடுக்க உதவுமோ யிதுவெலாம் தந்தை யுறவென்று தான் உன்னிரு பாதம் பிடித்தேன், யார் மீது வுன்மன மிருந்தாலும் முன்கடைக்கண் பார்வையென்றது போதுமே, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லை வாழ்நடராஜனே.
9

10 இன்னமுஞ் சொல்லவோ உன் மனம் கல்லோ இரும்போ பெரும் பாறையோ, யிருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ யிதுவுனக்கழகுதானோ, என்னென்ன மோகமோ யிதுவென்ன கோபமோ யிதுவேவுன் செய்கைதானோ, இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோயானாலும் நான் விடுவனோ, உன்னை விட்டெங்கு சென்றாலும் விழலாவனோ நான் உனையடுத்துங்கெடுவனோ, ஓகோ விதுயுன் குற்றமென் குற்றமொன்றதை யுற்றுப் பார் பெற்ற வையா என் குற்றமாயினும் உன் குற்றமாயினும் இனி யருளளிக்க வருவாய், ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே.

11 சனி ராகு கேது புதன் சுக்கிரன் செவ்வாய் குரு சந்திரன் சூரியன் வரை, சற்றெனக்குள்ளாக்கி ராசி பனிரெண்டையும் சமமாய் நிறுத்தியுடனே, பனியொத்த நட்சத்திரங்களிருப் பத்தேழும் பக்குவப்படுத்திப் பின்னால் பகர்கின்ற கிரணங்கள் பதினொன்றையும் வெட்டிப்பலரையும் அதட்டி யென்முன், கனிபோலவே பேசி கெடுநினைவு நினைக்கின்ற கசடர்களையும் கசக்கி கர்த்தனின் தொண்டராம் தொண்டர்க்கு தொண்டரின் தொணடர்கள் தொழும் பனாக்கி, இனியவள மறுவுசிறு மணவைமுனுசாமி யெனையாள் தினியுன் கடன் காண் ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே.

**நடராஜப்பத்து முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பரமசிவன் தோத்திரம்

காயாமரத்தின் கனியாகி கனியிற்கொட்டையுள்ளாகித் தாயாயீரேழுலகுக்குத் தந்தையுமான தயாபரனே, ஆயாமறை நூல்தனை வகுத்தவரனே யுந்தனடைக்கலங்காண், பேயா யெங்கள் பெருமானே பித்தா யெம்மையாளாயோ.

1

அரவம் அணியா யணிவோனே வரனேயடி யார்க் கெளியோனே மருவின் கொழுந்தின் வாசனைப் போல் மாயா மருளா மாதேவா, குருவைச்சீஷன் தனைத்தேடி குடிகொண்டுளத்தி லிருப்போனே இரவும் பகலுமுனைப் புகழ்வேன் ஈசா எம்மையாளாயோ.

2

மட்டார் குழலிதனைக் கூடிமாய வயிற்றுக்கிரைதேடி பட்டாங்கடித்துப் பரஞ்சோதி உன் பாதங்காணவேணுமென்றே கட்டாச் சுரபி கன்றது போல் காசினி யெங்குந் திரிந்தடியேன், எட்டாக்கொம்பையொட்டி நின்றேன் யீசாயெம்மை யாளாயோ.

3

வனக்குன்றெடுத்து வளர்த்தபெண்ணை வைத்தா யுந்தனிடப் பாகம், சினக்கும் புலித்தோல் தரித்தோனே சிவனே யெங்கள் பெருமானே நினைக்கும் பொழுது அடியேன் முன்னிமலா வந்து நில்லாயோ எனக்கு முனக்கும் போகாதோ வீசாயென்னை யாளாயோ.

4

கொல்லுங்களிறையுரித்தோனே குடிகொண்டுளத்தி லிருப்போனே, செல்லுந்தளத்திலிருந்தென்ன சிவனேயடியேன் படமாட்டேன், அல்லும் பகலும் உன்னை பகழ்வேனையா யுந்தனடை கலங்காண் இல்லும் பிறப்புமினி வேண்டேனீசா எம்மையாளாயோ.

5

வருவதும் போவதும் இனிவேண்டேன், வாழ்வும் வேண்டேன் புவிவேண்டேன், தருவதெனக்கு உன்பாதஞ் சர்வ ஜீவதயாபரனே, குருவுபதேசம் நீ தந்து குடி கொண்டுளத்தி லிருந்தடியேனரு வினையுறுத்தே யெனை யாண்ட வரனே யெளியேன் முன் வாராயோ.

6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லா வாழ்வைச் சதமென்று நெறியானடக்க மாட்டாமல், நல்லார் பொல்லார் ரென்றறியாமல் நமன்போல் நடுங்கித் திரிந்தாலும், அல்லார்க் குழலாளுமைபாகா வரனே யடியார்க் கெளியோனே, எல்லாம் பொறுக்க பாரமுனைக்கே யீசா யெம்மை யாளாயோ. 7

பொங்கு கடல்சூள் ழுலகமெங்கும் புவியிலேழு புவன மெல்லாம், எங்குமுந்தனொளியன்றோ யிறைவா எங்கள் பெருமானே, அங்கந் தளர்ந்து மிக மெலிந்து வடியேன், வயிற்றுக்கிரைதேடி, யெங்குந் திரிந்து வுழலாமல் லீசாயெம்மை யாளாயோ. 8

பொய்யு மெய்யுந் தானுரைத்துப் புவிமேல் வாழ்வைச் சதமென்று, கையுஞ் சலித்துக் கால் சலித்து கர்த்தா வுன்றன் செயலன்றோ, செய்யுந்தொழிலை மெய்யென்று சிவனே யடியேன் படுவானேன் மெய்யுஞ்சிலையாம் தனையெரித்த யீசாயெம்மை யாளாயோ. 9

நெருப்போவுந்தன் திருமேனி நீறோ பூசித்திரிவதல்லால், பொருப் போவுந்த னிருப்பிடம் தான் புவியீரேழு புவன மன்றோ, தருப்போல கிளைத்துத் தழைத்து நின்றாய் சகல சீவசெந்துக்குள்ளே, இருப்பாய் யெந்தனுளந்தனிலே ஈசாயெம்மை யாளாயோ. 10

மங்குமனித ரெலும்பை யெல்லா மார்மேல் நிறைய பூண்டு கொண்டு அங்கம் வளர்க்கப்படும் பாடு யார்தானறியப் போறார்கள், சங்குகரத்தில் மழுமானுந்தரித்து சூலம் பிடித்தெதிரே எங்கும் திரிந்து வுழலாம் லீசாயெம்மை யாளாயோ. 11

கல்லாதவனாயிருந்தாலும் கனத்தபாவஞ் செய்தாலும், பொல்லாதவனா யிருந்தாலும் புலையுங்கொலையுஞ் செய்தாலுஞ், செல்லா வாசல் தனைசென்று சிவனே யுன்னை மறந்தாலும் எல்லாம் பொறுக்க கடனுனக்கே யீசாயெம்மையாளாயோ. 12

படுவேன் பாடுபடச் சொன்னால் பாரஞ்சுமக்க பாரமுனக்கே, விடுவேனாசை விடச்சொன்னால் விதியின் பயன் தன் பயனன்றோ, சுடுவேன் பாவந்தனையின்று சுடரேயுந்தன் னொளியாலே, யிடுவேன் வழக்கு நானுன்னை ஈசாயெம்மை யாளாயோ. 13

**பரமசிவன் தோத்திரம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனாசிப்பத்து

வற்றாத பொய்கை வளநாடு கண்டு மலை மேலிருந்த குமரா, உற்றாரெனக்கு வொரு பேருமில்லை வுமையாள் தனக்கு மகனே, முத்தாடை தந்து வடியேனையாளு முருகேச ரெந்தன் மனத்தே வித்தாரமாக மயில் மீதுலேறி வரவேணு மென்றனருகே.
1

ஆலாலமுண்டோன் மகனாகி வந்து வடியார் தமக்குமுதவி, பாலூரமுண்டு கனிவாய் திறந்து பயனஞ் செழுத்தை மறவேன், மாலானவள்ளி தனை நாடி வந்து மரமாகி நின்றகுமரா, மேலான வெற்றி மயில் மீதிலேறி வரவேணு மென்றனருகே.
2

திருவாசல்தோறு மருள்வேத மோத சிவனஞ்செழுத்தை மறவேன் முருகேசரென்றுமடி யார் தமக்கு முதலாகி நின்ற, குமரா குருநாத சுவாமி குலமாது நாதர் குமரேச ரென்றபொருளே, மறவாமல் வெற்றி மயில் மீதிலேறி வரவேணு மென்றனருகே.
3

உதிரந்திரண்டு பனியீரலுண்டுருவாசல் தேடி வருமுன், ததிபோலெலுந்த திருமேனி நாதர் கடை வீடு தந்துமருள்வாய், முதிரஞ் சிறந்த கயல்வீறு செங்கை வடிவேலெடுத்த குமரா, சதிராய் நடந்து மயில் மீதிலேறி வரவேணு மென்றனருகே.
4

மண்ணாடுமீசன் மகனாரையுந்தன் மலை வீடுதந்து மருள்வாய் வண்டூரல் பாயும் வயலூரில் செங்கை வடிவேலெடுத்த குமரா, நன்றாக வந்துயடியேனை யாண்டுநல்வீடு தந்தகுகனே, கொண்டாடி வெற்றி மயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே.
5

நீலஞ்சிறந்த குறமாது வள்ளி நின் பாகம் வைத்த குமரா, காலனெழுந்து வெகுவோசை செய்து கயிறு மெடுத்து வருமுன் வேலும் பிடித்து வடியார் தமக்கு வீராதி வீரருடனே சாலப் பரிந்து மயில் மீதுலேறி வரவேணு மென்றனருகே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்கட்டு நூலின் நிழல் போல நின்று தடுமாறி நொந்துவடியேன், நிலைகெட்டுயானும் புவிமீதில் நின்று நெடுமூச்செறிய விதியோ யனைதொட்ட செங்கை வடிவேற் கடம்பா வடியேனையாளு முருகா, மலையேறி மேவுமயில் மீதுலேறி வரவேணு மென்றனருகே.

7

வண்டுண்டு பூவில் மதுவூரல் பாயு வயலூரில் செங்கை வடிவேல், கண்டொன்று சொல்லித் திரிவார்கள் வாசல் கடனென்று கேட்க விதியோ, வண்டுறுபூவி லிதழ்மேவு வள்ளி தெய்வானைக் குகந்த வேலா, நன்றென்று சொல்லி மயில்மீதிலேறி வரவே ணுமென்றனருகே.

8

விடதூதரோடி வரும்போது வும்மை வெகுவாக நம்பினேனே, குறமாதுவள்ளி யிடமாக வைத்து மயிலேறி வந்த செல்வா, திடமாகச் சோலை மலை மீதில் வாழுந் திருமால் தமக்கு மருகா, வடமான பழனிவடிவேல் நாதா வரவேணு மென்றனருகே.

9

ஓங்கார சக்தி யுமைபால் குடித்து உபதேசமுறைத்தபரனே, பூங்கா வனத்திலிதழ் மேவும் வள்ளி புஜமீதி ருந்த குகனே, ஆங்கார சூரர்பகை வீடுசோர வடிவேல் எடுத்த பூபா, பாங்கான வெற்றி மயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே.

10

ஆறாறுமாறு வயதானபோது வடியேன் நினைத்த படியால் வேறேது சிந்தனை நினையாமலுந்த னுசா ரசங்க ளருள்வாய், அசுரேசர்போ லேயமதூத ரென்னைத் கூட்டோட கட்டவருமுன், மாறாது தோகை மயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாரவுன்னை தொழுதேத்த மனதுகபடேது சற்று மறியேன், ஐயாவுனக்காளாகும் போது வடியார் தமக் கெளியேன், பொய்யான காய மறிவேயொடுங்கி உயிர் கொண்டு போக வருமுன், வையாளியாக மயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே.

12

ஏதேது ஜென்மமெடுத்தேனோ முந்தியிந்த பிறப்பிலறியேன், மாதாவும் தந்தை நீ மாதவன் தனக்கு மருகா குறத்திகணவா, காதோடு கண்ணை யிருளாக மூடியுயிர் கொண்டு போக வருமுன் வாதாடி நின்று மயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே.

13

அவனாசிப்பத்து முற்றிற்று.

## அருணாசலீசர் பதிகம்.

### காப்பு

கண்ணாலும் வண்ணக் கமலனுங் காண்டற்கரிய
அண்ணாமலையா ரடிமீதி - லொண்ணார்
துதியுரைக்க நாளுந் துணையாக அன்பர்க்கு
கதியளிக்குந் தும்பிமுகன் காப்பு.

### ஆசிரிய விருத்தம்.

நினைவாகி மூல நிலையாகி நேச நிஜரூபமான வடிவே, மனமாய்கை மூடி யறிவே கலங்கி மனமும் மயங்கி வெகுவாய் இனமோடிருந்து வசதிக் குலைந்து எமதூத ரோடி வருமுன், மனவேகமாக அருணாசலீசர் வரவேணு மென்றனருகே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலாயமேரு அதிலாறு வீடு கரை கண்டதில்லை யொருவர், வெயிலானஜோதி விளையாடும் வீடு வெளிமாய்கை யேதுமறியேன் பயிலான கொம்பிற் பசுங்காயுமாகி பழமா யுதிர்ந்து விழுமுன், மனவேகமாக அருணாசலீசர் வரவேணுமென்றனருகே.

2

நதியோடுதும்பை முடிமீதணிந்து நலமான வெள்ளை விடைமேல், பதியாயிருந்து உமை பாதி கொண்ட பரனேயுன் நாமமறவேன் விதினாதனேவ எமதூதர் வந்து வெகுவாதை செய்து விடுமுன் மதியே புனைந்த அருணாசலீசர் வரவேணுமென்றனருகே.

3

உற்றாருமில்லை யுறவில்லையாரு முறைசொல்லி யிப்பவரவே, பெற்றாருமில்லை மறைதேடுகின்ற பிரானேயுன் நாமமறவேன், கற்றாருமேற்ற வடியாரிருந்து தனியாயமர்ந்த கனியே, மற்றாரு மில்லை அருணாசலீசர் வரவேணு மென்றனருகே.

4

கொங்கை குரும்பை முலைமாதராசை கொடிதான மோகமதனாற், சங்கற்ப மென்று மறியாமல் வீணே தடுமாறியாவி விடுமுன் திங்கட்கொழுந்து முடிமீதணிந்த சிவனே யுன் நாமமறவேன், மங்கைக்கிரங்கும் அருணாசலீசர் வரவேணு மென்றனருகே.

5

உருவானகாய மதிலாறுவீடு உதிரங் கலந்த தேகம், கருவாக நின்று புவிமீதில் வந்து கபடேதுமொன்று மறியேன், குருவாகி நின்ற சிவஞான ஜோதி குருவே நின் நாமமறவேன், மருவீசுசோலை அருணாசலீசர் வரவேணு மென்றனருகே.

6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாத கோயி லணியாதநீறு பசியாத சோறு தருவாய், துணியாத வாசி சிவஞானமோன சுகமேயெனக் கருள்வாய், தணியாத கோப முடலோடிருந்து சலியாத மாய்கை வெளியே, மணியாடு நாதர் அருணாசலீசர் வரவேணும் மென்றனருகே.

7

சூதாகி நின்ற சிவசூத்திங்கள் சுளுவாயமர்ந்த சுழியே, பாதாதிகேச முடியோடிருந்து படுகாளிலாடு நடனம், வேதாவுமாட மதியாட மூவர் விளையாடி நின்ற வெளியே, வாதாடி நின்ற அருணாசலீசர் வரவேணு மென்றனருகே.

8

அடிமூல வட்ட மதிலாறு திட்டவதின் மேலிருந்த பரனே, துடியான சக்தி சிவரூபவல்லி சுகமான வேதவடிவே, அடியார்களுள்ளத் தெளிவாய் விளங்கு மரனே நின்நாமமறவேன், வடிவான ஜோதி அருணாசலீசர் வரவேணு மென்றனருகே.

9

கல்லாலநிழலினில் நால்வர் முன்பு காணாத யோக நிலையைச், சொல்லாது சொன்ன மெய்ஞ்ஞான மூர்த்தி சுடராயிலங்கு மரசே, வல்லாளமன்னனரு மைந்தனாகி வருஞானமான வடிவே, வல்லானுகந்த அருணாசலீசர் வரவேணு மென்றனருகே.

10

உரைதங்கி நின்ற வுயிரெங்குமாதி யுலகெங்குமேக வடிவாய், கரை கண்டதில்லை வெகுகோடி காலந் கலிகாலமாய் கையதனால், இரை தேடியாசை பசியான் மெலிந்துயிர் கண்டி யங்கி விழுமுன், வரை தங்கி நின்ற அருணாசலீசர் வரவேணு மென்றனருகே. 11

### கட்டளைக் கலித்துறை

கண்மணியே யைங்கரக் களிற்றைத்தரு காதலியாம்,
பொன்மணியே புறங்காடுறை பெண்மணியே பிறக்குந்திண்
மணியே யன்பர் தீவினை போக்கு திதி மணியே விண்
மணியே திருவண்ணாமலை திகழ் வேதியனே.

**அருணாசலீசர் பதிகம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

திருவண்ணாமலை

# உண்ணாமுலையம்மன் பதிகம்

**காப்பு - வெண்பா**

ஓங்குபெரும் பாருதவி வுண்ணாமுலையனை மேற் பாங்கு பெருஞ் செந்தமிழிற் பாவுரைக்க மநீங்கரிய வெந்துயரெல்லாம் போக்கும் வேழ முகன் செய்ய திருக்கந்த மலர்ச் செஞ்சரணங்காப்பு.

**ஆசிரிய விருத்தம்**

சீர்கொண்ட வாழிமிசை பள்ளிகொண்ட திரு மாலு முண்டகமிடை, யூர்கொண்ட நான் முகனும் பரந்து உடைகொண்ட சிந்தையோடுமே, பேர் கொண்ட வள்ளி மலை நாதர் நாம மிழைகொண்ட மின்னலிடையாய், வார்கொண்ட வுண்ணாமுலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே.

1

பிறவாடரும் புவனசம் பிறங்கு நனி வாவி சூழ மிளவெண், பிறைநீடு செஞ்சடாவி கண்டனாறு பெருகுஞ் சிறந்த வெழிலார் நிறையோடுகின்றகிரியும் விளங்க நிலைவாம வாலைநெடுநாள், மறைதேடு முண்ணாமுலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே.

2

கலையாய் மிலைந்தவீரி நீறுடுத்த கவினார் புவிப்பெண்வாளொண், டலையாய் விளங்கிடணவாதி கேடசயனஞ்சிரங்க ணொளிருஞ், சிலையாம் நீ வந்த தனி ஞானதீப சிகை கொண்டளாவு நெடிய, மலை மேவு முண்ணாமுலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே.

3

பொன்னிற் பரந்த புவியிற் பொருந்துபுள குற்ற மாதர் மயலிற், சென்னிக்கண் வைத்து மருள் வோனைப் பொய்யில் திருவேனைச் சற்று மிளகாந் கொன்னைச் சொலேனை கொடுமைக்குளேனை குறை தீரவுக் கணருளான் மன்னிக்கு முண்ணா முலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே.

4

எந்தாவிணின் கணிமையோர் பரவுமிதயந் தரும் பெருமையென் சிந்தாகுலங்களடி யோடகழ்ந்து சிதறும் படிச்செய் திடுவாள், பந்தானரும் யடியேனுளத்தை பருகும் பயங்கிளியென்முன் வந்தாள்க வுண்ணாமுலை நாமதேவி வரவேண்டுமென்றனருகே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயனாவினுங் கணரிமார்பினுஞ் சேவரனார் மருங்கு மிடவி, னயனார் விந்த மொருவாயிரங் கணக்கு மிந்திரன்ற னுழியும், உயமன் பிலங்கொளுயிர் தோறு நின்றனு வருகேசனன் றியுளதோ மயமாது வுண்ணா முலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே.

6

கறுவீடு தேச மதிலாறுவீடு கடைவீடு வுச்சிநடுவிற் பெறுவீடு காட்சி மணல் வீடு கட்டுப் பிசியே னெடுக்க வசமோ, எறிவீடெனெச்சால் இடுகாடு போமுனெளியேன் முனேகி வருவாய், வறுவீடு முண்ணா முலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே.

7

அரவுண்ட நஞ்சமதுதீரவென்று மறு மங்கை யாகிவரவும் பெருநீரிலோலை எதிரேறமாறன் பிணியான வெட்பகலவும் திரு வார்ந்த ஞானவமதங்கரந்து சீர் காழியதற்குதவவே வருசொல்லி யுண்ணா முலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே.

8

சுழியூடெழுந்த வழல்சோதி நீடுசுவை கண்டு வுன்னு மறிவை, இழைவாடுகின்றயெனையாரெனச் சொல்லிடுவே னெவர்க்கு முறவாம், ஒழிவாடு மோன தனிஞானியான விமையேதிணிலமிடறோன் வழிவாடு முண்ணாமுலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே.

9

அதிகத்துயர்க்குள் பகையெற்குணாம அசனத்தையன்றி யில்லை, பதிகத்தை நற்சரணபங்கயத்திலும் பரிவுற்றுரைக்க வெனையாள், ததிமெத்ததிச்சொல் கதியைத் தருமுத்தமியே பரைப்பேணுமையே மதிசத்திமுண்ணாமுலை நாமதேவி வரவேண்டு மென்றனருகே. 10

## கட்டளைக் கலித்துறை.

நாயகியே பொற்கணங்குடற்பைத் தலைகச்செயிற்று வாசுகிமேற்று பில்வோனருஞ் சோதரியேவர்கண் மயமா நுதலாம்பிறையாய் நின்றன் சேவடியில் சேயகத் தேவைத்திடு யுண்ணாமுலைச் சிறப்பையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேமனானந்த சுவாமி

## பதிகம்

1 ஓங்கார சூத்திர சதானந்த வாரியில்
ஓரெழுத் தானபரனே
ஓரியாய் நீயெனக் கஞ்செழுத்தொருசெவியி
லோதிவைத் தவனல்லாவோ
ஆங்காரமற்று சுகமற்று துக்கமுமற்று
ஐம்புலன் பாசமற்று'
ஆகா சங்கிடுகிடென் றிடியிடித்தமிர் தமழை
யாராதா ரத்தில் பொழிய
ரீங்கார நாதமணி வந்துவுக்குள்ளாகி
யிரவுச்சி புருவனடுவின்
இரதிமன் மதன்போல் விளையாடுவதைக் கண்டு
ராகமிட்டுனதுமுன்னை
வீங்காமனின்றுனது திருவடியின் மகிமைதனை
விகசிப்பதொக்காலமோ
வேதாந்த பரமசிவமெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே

2 அறியாத பாலனை யழைத்து புத்திகள் சொல்லி
அன்பு வைத் தாள்வதற்கு
ஐயையோ நானுனக் காகாத பாவியோ
அப்பனே யதவீகனே
மரியாதை யாகவெனை ரட்ஷிக்க தருணமிது
மாய்கைசம் மாரதேவா
மனமகிழாதின்றைக்கு வாராமல் போனாயோ
மடியில்கை போட்டிழுப்பேன்
பரியாசமென்றுவுன் சிந்தைதனிலிவ் வார்த்தை
பாராட்ட வேண்டுவதில்லை.
பத்தியா யுந்தனை மறவாம லனுதினம்
பாங்குடனிராமயத்தின்
வெரியா கிலுமதந் தகண்ட பரிபூரண
விவேகமறி விக்கொணாதோ
வேதாந்த பரமசிவமெய்ஞ்ஞான மூர்த்தியே
மேமனானந்த குருவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 பஞ்ச பூதங்களோடு யானுமொரு பூதமாய்
பட்டகுறை மெத்தவுண்டு
பட்ஷமுடன் கேட்பீரேயாமாகில் சொல்லக்கேளும்
பரமனே பரமயோகி
சஞ்சலப்படுகுழியில் கர்மமென்றெண்ணாமல்
சந்தோஷமாய் விழுந்து
சத்யநிலை யின்னை தென்றறியாமல் மூடனாய்
சகிக்காமலன்றுகெட்டு
கொஞ்சமாகிலு முனக் கஞ்சலிதைசெய்யாமல்
குரங்காய் முழிக்கலாச்சே
கோணாமல் வந்தெனக் குயர்வான வழிகாட்டி
கோரிக்கையின் படிக்கு
வெஞ்சின மறந்துமக ராஜகெம்பீரன்போல்
விந்தைதனில் வுட்காரவை
வேதாந்த பரமசிவமெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே.

4 எத்தனை பயந்தடி மைசரணமென்றழுதாலு
மென்மேலுனக்கு கருணை
எள்ளளவிலாதது விதிவசமிதென்னவோ
எப்போது மொருதிட்டமாய்
இதனை கடூர குணமேன் சித்தவி லாசனே
இந்த ஜகமாயதைத் தன்னுள்
இரவுபக லச்சமற முச்சந்தில் பத்துவிதமாய்
இங்கிதக் குயில்கள் பாட
முத்தியென் கிறசரியை மோட்ஷவை ராக்கிய
முத்திமிட்டணைவதற்கு
முட்டாளையாட் கொண்டு மெய்ஞ்ஞான மறிவித்து
மூக்கு நுனி மீதல் சதமாய்
வத்திலா மணிவிளக்கவியாம லெரியவே
வரமருள வேண்டுமென்று
வேதாந்த பரமசிவமெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 தத்துவக் குப்பையைக் கொளுத்தி தூளிதமாக்கி
தண்ணீரில் கலக்கி விட்டு
தனயனுன் னாளாவதற்கு யெண்ணங் கொண்டு
தாமத குணத்தைவெட்டி
சத்துசித் தொன்றாகியட்டாங்க யோகநெறி
சாதிக்கவே நாடொறும்
சரணமென்றுனை பணியுமடியார்க்கு மடிமையாய்
சதயமாய் கைமுழங்கி
பத்தரை மாற்று தங்கமாய் தங்கமொடுகெம்பாகி
பரமசிவ நாதசுடராய்
பவழமாய் படிகமாய் நீலமாய் கண்கொண்டு
பார்த்ததெல்லாம் பிரம்மமாய்
வித்துவாய் வித்துநடு முளையாகி நிற்கவே
விதமருளச் செய்யவேண்டும்
வேதாந்த பரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே.

6 எட்டாத வரசிக் கொடிமர வுச்சிதனிலேறி
எச்சரிக்கையாக நின்று
எண்சாண் துருத்தி தனிலெரிகின்ற தீ தணிய
எங்குமேலாடு பொருளாய்
முட்டாத காரம் பசும்பால் தனைவேண்டிய
முக்கண்ணுருட்டி தலமாய்
முலையுண்டதற்கு மொன்றஞ் சாமலைசையாய்
மும்மலங்களை யொழித்து
கட்டாத கட்டுபடுமந்திரம் ஜெபிப்பர்தமைக்
காரணகயிற்றில் கட்டி
காடிலா மலைமீதில் வேறிலமவுனபயிர்
காம்பிலா தரிவாளினால்
வெட்டாக வெட்டுறுத் தொரு நொடியில் சோறாக்கி
வெறிகொண்டு உண்பதன்றோ
வேதாந்த பரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 ஆதியா யந்தமாயந்தநடு வாதியாய்
ஆறுமுக ருத்ராட்ஷமாய்
ஆட்டமாய் பாட்டமாய் வோட்டமாய் நாட்டமாய்
ஆனந்த குஞ்சரிப்பாய்
சோதியாய் மின்னலாய் மின்னல் நடு மாசியா
சொக்கலிங்கக் கடவுளாய்
சோகமாய் மோகமாய் தாகமாயென் மனதை
சோதிக்க வந்த கனலாய்
நீதியாய் நேமமாய் நேமனடு முந்தியாய்
நீரோட்ட வெளிகுமிளியாய்
நீட்டமாய் வாட்டமாய் தேட்டமா யெந்நாளும்
நீங்காதா னந்தவடிவாய்
வேதியாய் கோபியாய் கோபமாயணுவாகி
விண்ணேற விட்டகனியே
வேதாந்த பரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே.

8 தன்னைத்தானறியாமல் தாய்போலுமுளறினால்
தாரகம் வெளியாகுமோ
தானென்ற வாணவப் பேயனைக் கொல்லாமல்
தப்பிதங்கட் போகுமோ
பொன்னையும் மண்ணையும் பெண்ணையு மறக்காமல்
பொய் மெய் யொன்றாகுமோ
பேதமாய் நாத சங்கீத மணிகேளாமல்
பம்பரம் பருடலாடுமோ
என்னையா னறியா மல் தலைவனைக் காணாமல்
எட்டுதிக் கொன்றாகுமோ
எச்சிலென் றமிர்தத்தை யுண்ணாக்கி லுண்ணாம
லெந்தனிட பசியாறுமோ
உனை சதா காலமாய் கீழ்மேல் துதிக்காம
லுன்னுடைய மனமுருகுமோ
வேதாந்த பரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமானானந்த குருவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 மண்ணுநடு வப்பாகி யப்புதனில் விஷ்ணுவாய்
மாய்கைநடு சங்கரனுமாய்
மனதுநடு பிரமமாய் பிரமநடு ஞானமாய்
மாணிக்க கொடிவிளக்காய்
கண்ணுநடு ரூபமாய் காதுநடு சத்தமாய்
கண்டநடு மந்திரமுமாய்
நானல்நடு ணாந்தலாய் நாந்தல்நடு நானலாய்
காணாதவெண் சாரையாய்
பெண்ணுநடு வாணுவாய் வாணுநடு பெண்ணுமாய்
பெரிய நாமக்கா ரணாய்
பேயனாய் பித்தனாய் வெறியனாய் ஊமையாய்
பேரின்ப மவுனநெறியாய்
விஷ்ணுநடு விந்துவாய் விந்துநடு நாதமாய்
விளையாடுகின்ற பரனே.
வேதாந்த பரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே.

10 சித்தியூரைச் சார்ந்த போடிமலை குகையினுட்
சித்தன்பு மீதில் நாட்டி
சிறிதுநா ளின்பதுன் பங்களுட னடிபட்டு
சிறியனுன் நாமதியானம்
பக்தியா யுருவேத் துணைக்காண் பதற்காக
பதினான்கு லோகமெட்டிப்
பஞ்சபூ தங்களை நொடிக்குளுன்னைக் கண்குளிர
பார்க்கலுற் றருமையானே
புத்தியுள் ளப்பிள்ளை என்றனுக் குபதேசம்
புண்டரீ காட்ஷனறியப்
பிரியமாய் நரசிங்க தாசனே கேளென்று
பட்சமென்மீதில் வைத்து
வெற்றிலையும் பாக்கு சுண்ணாம்பு மூன்றொன்றாக
விபரமருளிட்ட துரையே
வேதாந்த பரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே.

**வேமனானந்த சுவாமி பதிகம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராமர் தோத்திரம்

பூதலத்தை யோரடி யளந்தரூப மான பொற்பாததாமரைச் சரண் பணிந்து பூஜை செய்குவேன், மாதவா கோவிந்தா ஹரி கேசவா நாராயணா, நாதகீத மந்திர ராம ராம ராமனே.
1

சூகரத்தின் வடிவெடுத்த சுந்தராசவுந்தரா, ஏகலோக நாயகா நீயெங்குமாய் நிறைந்தவா, மேகமாயளாவி நின்ற வேதஞான தேசிகா, நாகமீதில் மேவுகின்ற ராம ராம ராமனே.
2

காரணா தாமோதரா கரிய நீலவண்ணனே, பூரணா பயோதரா புராதனா நிராதனா, வாரணாதி மூலமென்ற போதுவந்த வாமனா, நாரணாய சோதைபுத்ர ராம ராம ராமனே.
3

வீரசிம்ம உக்கிரமுற்ற விஜயமீது தசரதன், பாரில் மைந்தனாக வந்த பஞ்சவர்சகாயனே, பூரணே கிருபாகரா புதிய தூணில் வந்துமுன், நரசிம்ம ரூபமான ராம ராம ராமனே.
4

மாமனான கஞ்சனை வளைந்து கொண்டு வென்றவா, பூமியுண்டுமிழ்ந்தவா புகழ்ந்த பொன்னரங்கனே, வாமன சொருபனான வாசு தேவதேவனே, நாமமாயிரம் படைத்த ராம ராம ராமனே.
5

கோடிசூரி யப்பிரகாச கொண்டல்மேக வண்ணனே, வாடிநொந் திடைந்திடாமல் வந்தருள் புரிந்தருள், தேடி யந்தகன் வெகுண்டு சீறிமேவியென்னிடம், நாடி வந்தபோது காவாய் ராம ராம ராமனே.
6

பாவியென்று பேர்கொடாதே பஞ்சபாதங்களை, மேவி நூறுகுற்றமே செய்தாலும் வந்தென்மெய்யினில் காவலாக நீயிருந்து கருணைக் கொண்டு காரையா நாவினால் நிதந்துதிப்பேன் ராம ராம ராமனே.
7

தந்திதான் முன்னோலமென்ற போது வந்ததீத மாய் வந்து காத்த தன்றுபோல வந்து காப்பதெந்தநாள், செந்திரு மணாளனான ஸ்ரீநிவாச நாதனே, நந்நி சேகரன்றரித்த ராம ராம ராமனே. 8

மச்சரூப ராகவா வராகரூப ராகவா, கொச்சை ஆயருக்குகந்த குன்றெடுத்து நின்றவா, பச்சை ஆயனிற்று யின்ற பச்சை நீல வர்ணனே, ரட்சகா ஸ்ரீராகவா ஸ்ரீராமராம ராமனே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானஞ் செய்து மறிகிலேன் தவங்கள் செய்து மறிகிலேன், ஆனவன்பரான பேர்கட் கன்னமிட்டு மறிகிலேன், தேனமர் துழாய் கொண்டுன்னை சிந்தை செய்து வறிகிலேன் நானறிந்த தொன்றுமில்லை ராம ராம ராமனே.

10

காந்தமார் துழாயணிந்தக ருடகேசவாகனா செந்தடிமை யிவனுமென்று சூட்சபாத நல்கியே, யிந்த வேளை வந்து ரட்சி ஏக லோக நாயகா, நந்த கேசவா முகுந்தா ராம ராம ராமனே.

11

இல்லறத்தின் மாய்கையாலே யேங்கினேன் மயங்கியே, புல்லறிவு கொண்டு யானும் போற்றி யான் பணிந்திலேன் அல்லலற்ற காயமென் றறிந்துவந்து யென்னுளே நல்லறிவு தந்துரட்சி ராம ராம ராமனே.

12

சங்கு சக்கரந்தரித்த சாரும் ஸ்ரீனிவாசகா எங்குமாய் நிறைந்தவா விளங்கு முன்னூற்மார்பனே, மங்குல் மேனியா யுயர்ந்த மகர குண்டலாதிபா, ரங்கநாயகா முகந்த ராம ராம ராமனே.

13

அம்புபோல் விழிமின்னார்கள் ஆசைதன் வலைக்குளே, இன்பசாகரத்தழுந்தி எண்ணமற்ற வஞ்சகன் வம்புகோடி செய்திடினும்மாயனே பொருத்திடீர், நம்பினேனா னுன்னடிமை ராம ராம ராமனே.

14

ஆழிமீதினிற் றுயின்றவா அச்சுதமுன்னாதியில் ஏழுமரா மரத்தை யெய்து ராவணாதிகள், மாளவே சரந்தொடுத்த மாயனே மகிழ்ந்துயென்னாளும் நீ யுகழ்ந்து காவாய் ராம ராம ராமனே.

15

குற்றமென்ப தெதுசெய்தாலும் கொலைகள் செய்திருக்கினும், பெற்றதாய் விகாரமுண்டோ பிள்ளையென்று கொஞ்சுவாள், அற்றதன்மையாவனோ யான் குறை செய்தாலுமென், நற்றமிழ்க்குகந்து காவாய் ராம ராம ராமனே. 16

கழபவாசனை மிகுந்தகரியமேகவர்ணனே, துளப மாலை மார்புனைந்த சுருதிவேதநாயகா உளமகிழ்ந்து கருணை கொண்டுன்னடிமை நான்யென்று நளின தபாதம் தந்து காவாய் ராம ராம ராமனே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரகோ புரஞ்சிறந்த செய்யவீதி சூழவே, மகர தோரணஞ்சிறப்ப வரிசை மண்டபங்களும், பகர முற்ற கொடிகளும் பணிந்தானயோத்தியில், நகர வாச மாயிந்த ராம ராம ராமனே.

18

வாசமாலிகை புனைந்த மண்ணையுண்ட வண்ணனேகேசவா முராரி நந்தகிருஷ்னனே மனோகரா, தாசனென்று பாததாமரைச் சரண் கொடுத்தருள் ராசவெங்கடேசனான ராம ராம ராமனே.

19

கோலினிற்றுயின்றவாகுருத்திலேறி நின்றவா காலி கன்று மேய்த்தவா முன்கஞ்சனை வதைத்தவா, சால நான் முகனையுந்தி தன்னிலே படைத்தவா நாலுவேதமும் புகழ்ந்த ராம ராம ராமனே.

20

தஞ்சமாவதே, துன்பபாத தாமரைச்சரணமெ துஞ்ச வேறு தப்புமில்லை மேகநீலவர்ணனே, அஞ்சலஞ்ச லென்றுகையமர்த்தி யாதரிப்பையே, ரஞ்சிதப் பிரகாசனான ராம ராம ராமனே.

21

எண்ணுமன்பரான பேரிடத்திருந்து லாவியே புண்ணியநாம தேசிகா புவன ரட்ஷகர்த்தனே, வண்ணனே லீலாவினோத வாசனே நின்மலரடி, நண்ணினேன் வைகுந்தமேவும் ராம ராம ராமனே.

22

விருந்து செய்யவேண்டுமென்ற விதுரன் மனையிலேகியே, இருந்து மாய்கையாக வில்லிரண்டு துண்டமாக்கினாய், பொருந்துமாயமோ மயக்க புண்டரீக மாயனே, நறுந்துளபணிந்தரங்க ராம ராம ராமனே.

23

மாயவா முன் பாரதபோர் வந்து தோன்றும் நாளையில், நேயமாய் அருச்சுனர்க்கு நின்று தேரையூர்ந்தவா, ஆயனே ஆனந்தமாய் ஆதிலட்சுமியெனும் நாயகி மணாளனான ராம ராம ராமனே.

24

சாடிசெய் துரியோதிரன் சபையிலே திரௌபதை ஆடையன் றுரித்தபோது ஆதிமூலமென்றிட, வாடிடாமல் மானம்காத்து வனையுமாறு சீலைகள், நாடியொன்று லட்சமாக்கு ராம ராம ராமனே.

25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்சிலையென சபித்த வகலிகை சாபத்தையும், உச்சிதமாக வன்றுகந்து சாபநீக்கினாய், அச்சானகி யன்னைமேல் ஆசை கொண்டு மிதிலையில், நற்சிலை வளைந்து நின்ற ராம ராம ராமனே.

26

ஆவல் கொண்டு பாரிலே அலைந்துமே யலாது நின், சேவடிகளாய் வராத சென்ம மென்ன சென்மமோ, பாவ காரியமென்றண்ணாமல் பாதுகாத்தருள்புரி, நாவலர்க்கு பாய்சுமந்த ராம ராம ராமனே.

27

ஏகவஸ்து வாகிநின்ற யெங்கள் ரெங்கண்நாயகா சாகரத்தி னின்றுயின்ற சகஸ்திரநாம தேசிகா, மோகனா சவுந்தரா முராரி மோட்சகாரணா மேகவர்ண னாகிவந்த ராம ராம ராமனே.

28

ஜானகி மணாளனே தரணியையோ ரடியுமாய் வானம் ஓடளாவிநின்ற வராகவதாரனே நமோ நமோ நாராயணா முகுந்தனந்த கேசவா ஞான தேசிகப் பிரதாப ராம ராம ராமனே.

29

வேறு

செப்பியே உந்தி பூத்தோன்
செங்கண்மால் பதம் போற்றி
முப்பதும் படித்தோர் கேட்டோர்.
முற்றிலும் அச்சிலிட்டோர்க்கும்
தப்பிலா வரங்கள் தந்து
சந்ததி கிளைப்பெற் றோங்க
இப்புவு தன்னிலே வாழ்ந்து
எண்ணமற் றிருப்பர் தாமே.

ஸ்ரீராமர் தோத்திரம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீராமர் பதிகம்
## பன்னிருசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்

சீர்மேவு மாழ்வார்கள் பன்னிருவ ருன்புகழ் தசெப்பவும் ராமஜெயமே, திருவடிக்கன்பராய்ச் செல்வமுமுத்தியுஞ் சித்திதரும் ராம ஜெயமே, கார்மேகவண்ணனே யென்ற திரௌபதையை முன் காத்திட்ட ராம ஜெயமே, கரியாதி மூலமென் றோலமிட முதலையை கண்டித்த ராம ஜெயமே, பார்மீதிலுன் பாத தூள்பட்டெழுந்தகலிபரிவான ராம ஜெயமே, பாங்கான வேடந் மரா மராவெனப் பதவிப் புரிந்திட்ட ராம ஜெயமே ராமஜெயமே ஐயனே யெனை யாளுமெய்யனே ஸ்ரீ மதே ராமா நுஜாய நமவே.

1

விஞ்சுகா ரணியவன தசரிட்ஷிகளுக்காதரவு மேவிடும் ராமஜெயமே, மேலான தசரதன் மைந்தனாய் புவிதனில் விரைந்திடும் ராம ஜெயமே, செஞ்சொன்மொழி ஜெனக ராஜன் வில்லொடித்து ஜெயம் பெற்ற ராமஜெயமே, சீதைக் கிரண்டுவரங் கொடுத்துமே யயோத்தியில் சீர்பெற்ற ராமஜெயமே, தந்தைக்குரைத்த சொல் வழுவாது, தாரணியில் தந்தருளும் ராமஜெயமே, அஞ்சலென்றடியேனை யாதரித் துன்பாத மருள்செய்யும் ராமஜெயமே, ஐயனெ யெனை யாளுமெய்யனே ஸ்ரீமதே ராமா நுஜாய நமவே.

2

விண்ணொளிய தாகவே நந்தகோபன் மனையில் விளையாடும் ராமஜெயமே, வில்விஜயனுக்கு பகவத்கீதை யோதியே வெற்றிதரும் ராமஜெயமே கண்ணொளியதாகவே யன்புடன் கோவுகளை காத்ததும் ராமஜெயமே, கஞ்சனை வதைத்ததுடல் கிழிந்தெறிந்தனைவர்க்குங்காட்சிதரும் ராம ஜெயமே, கன்றென சுரனைப் பாய்ந்து குடலைக் கிழித்து மறை கொண்டுவரும் ராம ஜெயமே, கொற்றவன் தசரதன் பெற்றசீர் மைந்தனே கோவிந்த, ராமஜெயமே, அண்ணலே யுனதுதிருவடியார்கள் பங்கினிலமர்ந்தருளும் ராமஜெயமே, ஐயனே யெனையாளுமெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றமிதிலைப்பதியில் வில்லி ரண்டாகவே யொடித்தது ராமஜெயமே, உம்பர்தொழு மங்கையை யுணர்ந்து சதிருமந்திர முவந்தரும் ராம ஜெயமே, கொற்றவர்கள் கண்டு தொழ பரசுராமன் கையில் கொண்டதும் ராமஜெயமே, கோதண்ட வாள் கதா சங்குசக்ராயுத கோபால ராமஜெயமே, மெத்தவருமூலபல மத்தனையுமே கொன்று வெற்றி பெறும் ராமஜெயமே, மெலிவுற்ற சுக்ரீவனுக்காக வாலியை வீழ்வித்த ராமஜெயமே அத்தனே யெனையாளுங் கத்தனே, மெய்ஞ்ஞான மருள் புரியும் ராம ஜெயமே, ஐயனே, யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமா நுஜாய நமவே.

4

சோதியே யென்று மறைவேதியரம்களோ தவுஞ் சொல்லரிய ராமஜெயமே, சோம்புடனே வந்த விபீஷணன் குறைதீர்க்க, தோன்றிடும் ராமஜெயமே, ஊதிய குழலினாலே கனத்தனவலே யுகந்ததும் ராம ஜெயமே, உயர்கருடன் மீதினிலி லட்சுமி சமேதனாயுலவிவரும் ராமஜெயமே நீதியே வழுவாமல் அஷ்டாட்சரப் பொருளில் நின்றது ராமஜெயமே நித்தனாயத்தனாய்ச் சுத்தனாய் வைகுந்த நிலைகொண்ட ராம ஜெயமே, ஆதியே நின்னாம மோதுவோர்க்கெந்நாளு மருள் புரியும் ராம ஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமா நுஜாய நமவே.

5

மண்டலம்புகழவே வாசுதேவன் மைந்தனாய் வந்தருளும் ராமஜெயமேம மாயாவதாரமாய் கோபிஸ்திரீ மாரெலாமயல் பூண்ட ராமஜெயமே, விண்டலம் புகழ் திருப்பதிகனூற் றொட்டினும் விளங்கினதும் ராமஜெயமே, வேதவேதாந்த பரிபூரண தயாபரமெய்ஞ்ஞான ராமஜெயமே கொண்டல் மணி வண்ணனாய்ப் பாற்கடலிலே பள்ளி கொண்டதும் ராம ஜெயமே, கோடானுகோடிபேர் பல்லாண்டு கூறியே கொண்டாடும் ராமஜெயமே, அண்டர்தினமேதொழும் புண்டரீக பாதனே யரும் பொருளும் ராமஜெயமே, ஐயனே யெனையாளும் மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே.

6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்து முக்கோடி தேவரு முனிவரும் மொழிகின்ற ராமஜெயமே, மூவரும் ராமஜெயமே, யெனவுரைக்க நன் முத்திதரும் ராமஜெயமே செப்புமந்திரமெலாம் ராமஜெயமே, மார்பில் திருவளரும் ராமஜெயமே, சீர்கொண்ட ராமஜெய மார்கண்டு பணிகுவார் சித்திர மொளிராமஜெயமே, ஒப்பரிய ராமஜெயமே மெய்ப்பொருளும் ராமஜெயம் தோதரிய ராம ஜெயமே, உட்சதரும் ராமஜெயம் பட்சதரும் ராமஜெயம் ஓங்கார ராமஜெயமே, அப்பனே ராமஜெயமென்று துதி செய்யவு மன்புதரும் ராமஜெயமே, ஐய்யனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே.

7

சக்தியும் ராமஜெயமுத்தியும் ராமஜெய சர்வமும் ராமஜெயமே, சாத்திரமும் ராமஜெயமே தோத்திரமும் மிரமஜெயஞ் சதுர்வேத மிராமஜெயமே, பக்தியும் ராமஜெயமே சித்தியும் ராமஜெயம் பதவியும் ராம ஜெயமே, பக்தர் தொழும் ராமஜெயம் சித்தர் தொழும் ராமஜெயமே பலவிதமும் ராமஜெயமே வெற்றியும் ராமஜெயமே புத்தியும் ராமஜெயம் மெய்ப்பொருளும் ராமஜெயமே வேள்வியும் ராமஜெயமே ஆவியும் ராமஜெயம் மேல்வீடும் ராமஜெயமே, அத்தியின் மேல் பவனி வரும் நித்திய கல்யாணனே ஆனந்த ராமஜெயமே, ஐயனே எனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே.

8

பாடவறியேன் ராமஜெயமென்று நின்புகழ் பகரவறியேன் ராமஜெயமே, பக்தியாய் ராமஜெயமென்றுனது பாதமலர் பணியறியேன் ராமஜெயமே, தேடவறியேனின்னை ராமஜெயமே தேவர்க்கு முனிவர்க்கு யாவர்க்கு மரிதான தேனமுர்த ராமஜெயமே, நாடவறி யேனின்னை ராமஜெயமே யெனநவிலவறியேன் ராமஜெயமே னுனக்கடிமையானே னெனக்கு கதி நலல்குவாய், ராமஜெயமே, ஆடரவ முண்டபல கோடிபேருண்ட பொருளானந்த ராமஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. **9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாயகண்டபரி பூரணமுலா யெங்கும் விளையாடுகின்ற ஜோதி, விண்ணவர்க் கமுதளித்த வண்ணலே யுன்புகழ் விளம்புதற்கரிது கண்டாய், தெரியாமல் நாயேனிடர்க் கடலிலே மூழ்கி சிந்தை மிக நொந்துருகினேன், தேவாதி தேவனே வைகுந்தவாசனே செந்தாமரைக் கண்ணனே, பரிவான வுனது திருவடியே யெனகருதி பரம புருஷாவுனக்கு பாரமே, துயர்களைய நேரமோவிவ்வேளை பட்ஷம்வைத் தடியேன் மீதில், அரிய நமோவேத நாராயணா கிருபை அருள் புரியும் ராமஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமா நுஜாய நமவே.

10

சீர்கொண்ட ராமஜெய மென்றுதிரு மந்திரஞ் செபிக்கவறியாமலாயேன், செப்பினேன் ராமஜெயமப்பனே நூற்றெட்டு திருநாம மிராமஜெயமே, நீர் கொண்ட பாதமிசை மலர் கொண்டு சாத்தியே நித்தமு மிராமஜெயமே, நெஞ்சினிலிராமஜெய மந்திரமு வந்தருளும் நீங்காமல் ராமஜெயமே கார்கொண்ட திருமேனி ராமஜெயமே யென்னைக்காத்தருளும் ராமஜெயமே, காதலால்ராமஜெயமே வென்று நம்பினேன் கர்த்தனே ராமஜெயமே, ஆர்கண்டு மறியாது மூலமந்திரமானவாதியே ராமஜெயமே ஐயனே யெனையாளும் மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே.

11

**ஸ்ரீ ராமர் பதிகம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெருடப் பத்து

ஓம் பூரணனே பதினாறுதிங்கள் சேரும் பொருந்தியே யருக்கன் பதினெட்டுஞ் சேரும், காரணனே கருமுகில் பொன்மேனிசேருங் கருணைபெரு மஷ்டாட்சரங் கலந்து வாழும், வாரணனே லட்சுமியோடெட்டுஞ்சேரும், மதிமுகம்போல் நின்றிலங்கு மாயாநேயா ஆரணனே ரகுராமா கெருடன் மீதில் அன்புடனே யேறிவந் தருள் செய்வாயே.

1

மந்திரமோ அஷ்டதித்து மெட்டுஞ் சேரும், வாழ்கிரக மொன்பதுமே வந்து சேரும், கந்திருவர் கணநாத ராசிவர்க்கம் கலைக்கியான நால்வேதங் கலந்து வாழும், நந்தி முதல் தேவர்களுங் கவன யோகம் நமஸ்கரித் துன் பாதம் நாளும் போற்ற, அந்தரமாய்நிறைந்திருக்குங் கெருடன் மீதில் அன்புடனேயேறி வந்தருள் செய்வாயே.

2

மூலமுதலோரெழுத்து நீர்தானாகும் மூன்றெழுத்து மைந்தெழுந்து மொழியலாமோ, சீலமுதல் ஓம்-அங்-உங்-மங்-றிங் கென்றே சிவனுடைய திருநாமம் நீர்தானாகும். காலமுதல் ஓம்-அங்-உங்-மங்-றிங் கென்றே கருணைபெரு மிவ்வெழுத்து நீர்தானாகும். ஆலவிஷங்கை யேந்துங் கெருடன்மீதில் அன்புடனே யேறிவந்தருள் செய்வாயே. 3

நவ்வென்றும் கிலியென்றும் ஓம்சிவாயமென்றும் நமநம சிவசிவ ராராவென்றும், சவ்வென்றும் ஓங்கார ரீங்காரமாகித் தவமுடைய விவ்வெழுத்தும் நீர் தானாகும், ஒவ்வொன்றும் ஓம் நமோ நாராயணா வென்று உன்பாத முச்சரித் துகந்து போற்ற, அவ்வென்று ரகுராமா கெருடன்மீதில் அன்புடனே யேறி வந்தருள் செய்வாயே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிக்கின்ற சிவசொரூப முனக்கே யாகும் ஓம்-அவ்வும்-உவ்வுங்கிலியு மென்றெ, பதிக்கிசைந்த ஐந்தெழுத்தை வெளியில்விட்டே பச்சை முகில்மேனியனே பணிந்தே னுன்னை, விதிக்கிசைந்த மெய்ப்பொருளே அரி கோவிந்தா, விளக்கொளி போல் மெய்த்தவமே விரும்பித்தாதா, அதற்கிசைந்த நடம்புரியும் கெருடன்மீதில் அன்புடனே யேறிவந்தருள் செய்வாயே.

5

வேதமுதலா யிருந்த சிங்கரூபம் விளங்குகின்ற விரணியனை வதையேசெய்தாய் பூதமுதலாம் பிறவும் புண்ணியநேயா புகழ்ந்தவர்க்குத் துணைவருவா யசோதைபுத்ரா, நாதமுதல் விந்துவா யுயிருக்கெல்லாம் நயம் பெறவே நிறைந்திருக்கும் வரத பிரமயாதவன் போல் நிறைந்திருக்கும் கெருடன் மீதில் அன்புடன் யேறிவந்தருள் செய்வாயே.

6

முக்கோண நாற்கோண மொழிந்தைங் கோணமுச்சுடரே யறுகோண மெண்கோணமாகும். சட்கோண நாற்பத்து மூன்று கோணம் தந்திரமுஞ் சிதம்பரமுஞ் சகலசித்தும், இக்கோணமிது முதலாய் வகாரமட்டும் இறையவனாய்த் தானிருந்து ரடசித்தருளும். அக்கோணமீதிருந்து கெருடன் மீதில் அன்புடனே யேறிவந்தருள் செய்வாயே.

7

பச்சை முகில் மேனியனே யுனக்கே யிந்தப் பார்தனிலே பத்தவதாரமுண்டு, மச்சமென்றும் கூர்மமென்றும் வராக மென்றும், வாமனென்றும் ராமனென்றும் பவுத்தனென்றும், துஷ்டரையடக்க மோகினி வேடங்கொண்டவராய்த் தோன்றினாய் யுன்சொரூப மெல்லாம் அறிவாருண்டோ, அச்சந்தீர்த் தெனையாளக் கெருடன்மீதில் அன்புடனே யேறிவந்தருள் செய்வாயே.

8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியனாய்த் தோன்றிவந்தாய் மாபலிக்கு விண்ணவர்க்காய், நரசிங்கரூபமாய்ச், சாதியிலே ராகவனாய்க் கிருஷ்ணனாகத் தானுதித்து வந்திருப்பாய் தரணி வாழ்க, சோதனைகள் பார்த்திடுவாய் துதிப்போர் தம்மை துஷ்டரையும் வதை செய்துலோகமாள்வாய், ஆதி முதலோ ரெழுத்தே நீகெருடன் மீதில் அன்புடன் யேறி வந்தருள் செய்வாயே. 9

மாயவனேரகுராமா அருகேவாவா வஞ்சனைகள் பறந்தோட நெஞ்சில் வாவா, காயாம்பூ நிறமுடனே கனவில்வாவா கருமுகில் மேனியனே என் கருத்தில் வாவா, நாயகனே யென்னாவிலிருக்க வாவா நாள்தோறும் முன்பாதந் துதிக்கவாவா, ஆயர்குலத்துதித்தவனே கெருடன்மீதில் அன்புடனே யேறிவந்தருள் செய்வாயே. 10

முப்புரத்தை யெரித்தவனே யிப்போ வாவா முகில் நிறத்தனே ஜகநாதா முன்னே வா வா எப்பொழுதுந் துதிப்பவர் பங்கில் வாவா ஏழைப் பங்கிலிருப்பவனே யிறங்கி வாவா, ஒப்பிலா மணிவிளக்கே யொளிபோல்வாவா, ஓம் நமோ நாராயணா வுகந்து வாவா, அப்பனே ரகுராமா கெருடன் மீதில் அன்புடனே யேறிவந்தருள் செய்வாயே. 11

துளபமணிமார் பழகா சுகத்தைத் தாதா சுருதியே மெய்பொருளே வரத்தைத்தாதா கள பகஸ்தூரியனே கடாட்சந் தாதா, கம்சனை முன் வென்றவனே கருணை தாதா, பழம் பொருளே சிவ சோதி பாக்கியந்தாதா பத்தி முத்தி சித்தி செய்யவுன் பாதந்தாதா, அளவில்லா மெய்ப்பொருளே கெருடன்மீதில் அன்புடனே யேறிவந்தருள் செய்வாயே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கஜேந்திர மோட்க்ஷக் கீர்த்தனை

இராகம் சுருட்டி - தாளம் ஆதி பல்லவி

மூலமென்றழைத்த யானையைக்காத்தருள்
முகுந்தனைப் பணிநெஞ்னமே

அனுபல்லவி

சீலமேவும்பத்மாசனன் வணங்கும்
திருவரங்கத்தர வணைமிசையுறங்கும்
நீலமேனியனை நிறைபரஞ்சோதி
நித்தியநிர்மல நிராமய ஆதி (மூல

சரணங்கள்

மழையெனமும்மதம் பொழியும்விகடதட
மத்தகஜங்கள் கோடி - இரு
மருங்குமணியணியாய் நெருங்கித்தொடர்ந்து
வரவனத்தில் நடந்தோடி
எழுகடலாமெனயலைகள் பொன்மணிகொழித்
தெறியுமடுவைத் தேடிவண்
டிரைத்தக்கமலம்விண்டு சுரக்குஞ்செந்தே
னிறைத்தினித் தண்புனல்நாடி
அழகோடிறங்கியதில் முழுகியேபைய
அலைப்புத்தணியப்பல சலக்கிரீடை செய்ய
மழைநிகர்வாய்த் திறிந்தனல்விழி பெய்ய
முதலைப் பிடித்தளவிற் கதறியேயுய்யற - மூல
காலனைப்போலுக்ர மானகராவினைக்
கண்டதனோ டுடி - வெகு
காலமனுவளவும் வெறுப்புசலிப்பில்லாமல்
கடுமையோ டுடாடி
ஸ்தூலசரீரமகமேரு நிகருடலுஞ்
கப்பல்போல வாடிக் - கால்
துவண்டுபராக்கிரமங்குறைந்து நடுங்கிவிழி
சொருகிக் கண்மூடி
ஞாலமேலெதிர்ந்த தீவினைப்பழுது
நமக்கென்றதலைமிசை துதிக்கைவைத்தழுது
ஓலமிட்டண்ட சராசரமுழுதும்
உடையவனெவனவன் கதிஎன்றுதொழுது - மூல
அடுத்துசெவியில்வந்து நுழைய - அபய
மென்னுமந்தக்குரலைக் கேட்டு - பால்
அலைவழாழியிற் பெரியபிராட்டியோ
டாடியவினை யாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்துயர்கருடன்மே
விரித்தெழுமணிச்
மெத்தைதுறந்துதிரு
விளங்கியெழில்
வடந்தணிகவுஸ்துவமசைய
வங்கயபசுந்துளப
எடுத்திடவுருவஞ்செந்
எனச்சிறந்திடட்ஷணத்
மிக்கதிர்சூரியனுந்தன்
மித்துக்கண்கள்
மீதுகவிந்தநவ
விண்ணிடை
எரிமணிப்பிரபை
திந்திரதனுமிசை
ஏந்தியபாஞ்ச
மிலங்கிடக்
வரையுறைசிவன்முத
மாயமோவென்றிறைஞ்சித்
திருமுகம்வேர்த்துளங்
சித்தமிரங்கிக்கிருபைபெருகியே
காதினிற்குண்டல
பாதலத்தகன்
கெனவர்மலர்மாறி
கானங்கின்னரர்
கோதநவயிற்றில் வைத்திடு
குலுங்கநான்மறை
கொத்துமலர்மாலை
துந்துபியொலி
மாயவர்களித்திட
மரகதமலைப்போலெதிர்
நீ திகைத்தஞ்சாதே
நெடியமுதலை
நிடர்தொலைத்

ளேரியாயிரம்படம்
சூட்டிச் - சேஷ
மார்பிற்பளபளென
காட்டி
பொன்னாடை
பரிமளவாடை
தாமரையோடை
தொழிந்திடப்பீடை
னொலிமயங்கிப்பிர
கூச - முடி
ரத்னநெடுமகுடம்
வெளியில்வீச
திகழ்வாகுலமேகத்
யேகக் - கையில்
சன்னியசக்ராயுத
கைலாச
லோரிதுவென்ன
திறம்பன்னத்
குறுநகைதுன்னச்
மின்ன - மூல
ஜோதியினாலிருள்
றோட - மிகக்
சொரியத்தேவ
பாட
சகலாண்டமும்
தேடச் - செழுங்
சரிந்திடஅந்தர
வெகுவாய்நீட
வேகமொடுசென்று
நின்று
யஞ்சாதேயன்று
யைக்கொண்
தன்று - மூல

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியன்கள்

ஸ்ரீசைலேஸ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
யதீந்த்ர ப்ரணவம் வந்தேரம்யஜா மாதரம் முநிம்.

லக்ஷ்மிநாத ஸமாரம்பாம்நாதயாமுந மத்யமாம் அஸ்மதா
சார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம, வியா மோஹ
தஸ்ததிதராணித்ரு ணாய மேநே, அஸ்மத் குரோப்பகவே தோஸ்ய
தயைக சிந்தோ, ராமா நுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்யே.

மாதா பிதாயுவதஸ்தநாயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநிய மேநமதந்வயாநாம்
ஆத்யஸ்யந குலதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளாம் ப்ரணமாமிமூர் த்நா.

பூதம்ஸரஸ்சமஹதாஹ்வயப்பட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஸேகர யோகஜவஹாந்
பகதாங்கிரி ரேணுபரகால யதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீ மத்பராங்குச முநிமப்ரணதோஜ்மிநித்யம்

குருமுகமநதீத்யப்ராஹ வேதாந ஸேஷாந்
நரபதிபரிக்லுப்தம்ஸுல்கமாதாதுகாம
ஸ்வஸுரமம ரவந்த்யம்ரங்க நாதஸ்யசாக்ஷாத்
த்விஜகுலதிலகந்தம் விஷ்ணு சித்தம்நமாமி

## நேரிசை வெண்பா

மின்னார் தடமதில்சூழ் வல்லிபதிதுார் என்றொறு கால் சான்னார்
கழற்கமலம் சூடினோம் முன்னாள்
கிழியறுத்தானன்றுரைத்தோம் கீழ்மையிற் சேறும் வழியறுத்தோம்
நஞ்சமேவந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
பாண்டியசங்குமெடுத்துாத வேண்டிய வேதங்களோதிவிரைந்து
கிழியறுத்தான் பாதங்கள் யாமுடைய பற்று.

தனியன்கள் சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாமப் பதிகம்

## பன்னிரு சீர்க்கழி நெடிலாசிரியர் விருத்தம்

ஆதிபரஞ்சோதியா யண்ட பகிரண்டமா யநாதியாய் நின்றநாமம் அடி முடியுனடுவாகி எளியவன் களிகூற வன்புவைத்திருந்த நாமம், நீதி நெறியாகவே மணிபூரகந்தனில் நிலையக நின்றநாமம், நேசமுடனே கருடவாகன மீதேறியேநின்று விளையாடுநாமம், வீதிவெளியாகவே உச்சிமலைமீதினில் விளக்கொளியில் நின்ற நாமம், மேலாம்பதத்தையும் நாலாம் பதத்தையும் விளங்கக் கொடுக்கும் நாமம் 'நாதாந்த பேரொலியதாகவே விளங்கிடு நமோநமோ வென்ற நாமம், நாராயணா ஹரி கோவிந்தாவென்று தினம் நாடி வரு திருநாமமே.

1

ஹரிநமோ வென்றுரைப் போர்க்குமே பாண்ட வர்க்கருளாகி நின்ற நாமம், அர்ச்சுனர்க்காகவே கதிரோனை மறைத்து நல்லரசு நிலை வைத்தநாமம் பரிவனகிருஷ்ணாவதாரத்திற் பூதகிபருத்தமுலை யுண்டநாமம், பாரினில் கல்லினை மிதித்து பெண்ணாகவெ பண்பருள் புரிந்தநாமம் திருமேவு பிரகலாதனன் தனக்காக நரசிங்கமுகமான நாமம் தேவாதி தேவரை யிடுக்கண் வைத்தோர்களைத் திறைக்கொன்டிருந்த நாமம், கருவாகியுருவாகி திருவாகி மருவாகி காட்சிதந்திட்ட நாமம், கரியீச பிரகாசதிருநேச பரவாச கருணைதரு திருநாமமே.

2

முன்னாளிலே சிவன்றிருக்கையிற் பாணமாய் முப்புரமெரித்த நாமம், முதலைவாய் சிக்கிய கரிக்கந்நாளில் லாதிமூலமாய் நின்ற நாமம் பொன்னான ருக்மணிதேவி கல்யாணத்திற்போராய்த் துலைத்த நாமம் பூத பிசாசு பில்லிசூனிய முதல் யாவுமே பெய்யாக்கிவிட்ட நாமம். சின்ன பின்னங்களாயிராவணன் சிரசினைத் திட்டமுடனரிந்த நாமம் சிரஞ்சீவியாகவே விபீஷணன்றனக்குமே ஜெயப்பட்டமீந்தநாமம், கன்னிவயதாகவே கருணா சமுத்திரத்திற் காட்சி தந்தருளும் நாமம், கரியீச பிரகாச திருநேச பரவாச கருணை தரு திருநாமமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிரண்டாயி மிடையர்தம் மாதருக்கிறையா யிருந்தநாமம், இகலோகபரலோக சொர்க்கலோகமு முதலோகமாய் நின்ற நாமம் மண்ணுக்கும் விண்ணுக்கும் மொன்றான மாவலியை வன்சிறையில் வைத்த நாமம் மராமரமொரு கணையிலுருவவே தொட்டன்று வாலியை வதைத்த நாமம் ஒன்றிற்கு மைந்திற்கும் உண்மையதுவாக வேவுந்தியிலுதித்த நாமம், ஓம்நமோ நாராயணா பரந்தாமா வென ஒதவே நின்ற நாமம், கண்ணுக்கும் நாசிக்கும் நடுவாகவே நின்று காட்சியே தந்த நாமம் கரியீச பிரகாச திருநேச பரவாச கருணை தரு திருநாமமே.

4

சிலைதனை வளைத்த பின் ஜனகன் மகளான சீதையை மணந்த நாமம், திருவரங்கேசராய் காவேரி வாசராய்த் திருசனன் மானநாமம், கலையினையுரித்திட்ட பாண்டவர்கள் மனைவிக்குக் கருணைதந்திட்டநாமம், காலிகள் திரண்டிடக் கானகந்தன்னிலே காவலாய் நின்ற நாமம், மலை தனைச் சுமந்தன்று கோக்களின் மாளாமல் வருணனைத் தடுத்த நாமம், மாரீசன் பின்னே திரிந்து மிருகூராக மானையே யெய்தநாமம், நிலைபாத சூரனை வராதவவதாரமாய் நின்றன்று கொன்ற நாமம், நீலமேகத்தை நிகர் காயாம்பூ வண்ண னெனு நெடியவன் திருநாமமே.

5

சாலோக சாமீப சாரூபமாகவே சாயுச்சியமான நாமம், சகலகலை வேதபுராணங்களுக் கெல்லாம் தயாபரம தான நாமம், பூலோக புவலோக பாதாள மீதிலே புண்ணியமளித்த நாமம், புவனமதுதன் னிலே நாலாறதன்னவே புராணகலையான நாமம் அலோலமாகவே யண்டங்களாயிரத்தெட்டா யளந்த நாமம் அங்குளோ ரிங்குளோ ராகவே யவர்க்கு மறிவிக்க வந்த நாமம், பரலோகமாகவே பன்னக சயனத்தில் பள்ளிகொண்டிட்ட நாமம், பரவாச குருவீச திருநேச பிரகாச பகவானது திருநாமமே.

6

சுழியான முனையிலே சூஷாதி சூஷ்மாய்ச் சொல்லியே நின்ற நாமம், சொல் காவியங்களுக்கு பாசுர மாக சொல்லி வைக்க வந்த நாமம், வெளியான வெளியிலே மேலான வீட்டிலே மீதங்கிருந்தநாமம், வித்தாரமாகவே யுத்தார மோதவே வித்தாரமான நாமம், அழியாததேக மெடுத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்செயலுதவியாய் நின்றநாமம், உள்ளூற்ற சோதியாய் வெள்ளூற்ற காதலாயுள்ளத்தில் நின்ற நாமம், அழியாத பதவியை யீந்தெனை யெந்நாளுமடிமை கொண்டிட்ட நாமம், ஹரிநமோ நாராயணா வென்றுரைப்பவர்க் கரியபெரு திருநாமமே. 7

நாளுந்தன் பாதமுஞ் சேர்த்துமம் வருங்காலை தற்காத்தேயருள் செய்தநாமம், சந்திரன் செல்வாழ்வு தொலையாத பாக்கியஞ்சார்ந்துரட்சிக்கும் நாமம், தேனந்த மாகவே திருநாமபோதந் தரிசிக்க வந்த நாமம், திரு அவதார மாய்த தாசானு தாசனாய் செக தலம் பரவுநாமம் ஆனந்த மாகவே ஓங்காரகம்பமாயுளமுருகி நின்றநாமம், உல்லாச மாகவே மூவகை தோத்திரமே வுயிராகி நின்ற நாமம், ஆனந்தமாகவேயணுவுக்கு மணுவாகி யசைவாகி நின்ற நாமம், ஹரிநமோ நாராயணா வென்றுரைப்பவர்க் கரியபெருதிருநாமமே. 8

செய்யாத பாவங்கள் செய்தாலும் நீக்கிடும் ஸ்ரீ ராமா வென்ற நாமம் தீராத வல்பிணிகள் மாறாத துன்பங்கள் தீர்த்துரட்சிக்கும் நாமம் பொய்யான காமப் பெருங்கடல் வீழ்த்தாது புன்பிறவி தீர்க்கு நாமம், புண்டரீகாட்சினைக் கண்டு சேவிக்கவே புன்முறுவல் செய்யு நாமம், மெய்யான கிருபைதரு வைகுந்த வாழ்வினை வீறாயளிக்கு நாமம் மெய்ஞ்ஞான வழிதந்தேயஞ்ஞானம் நீக்கியே மேன்மை தனையீயு நாமம், நையாமலே தினமும் நம்பினேனென்ற வரைநாடி ரட்சிக்கும் நாமம், நாராயணா ஹரிகோவிந்தா வென்று நாடிவரு திருநாமமே. 9

ஸ்ரீரங்கமாகவே நூற்றெட்டுத் திருப்பதி சிறந்தோங்கி நின்றநாமம், தினந்தினமிராம வென்றுரைப்பவர்கள் சிந்தையுட் சிறப்புற்றிருக்கும் நாமம், நீங்காமலெந் நாளுமதி கதிர்விளக்கமாய் நிரம்பியே நின்ற நாமம், நிஜ நித்யமானதொரு பரசத்திய வாசமாய் நிறையுற்றிருந்த நாமம், பாங்கான பேருடன் வாங்காமலே தினம் பண்பினை கொண்ட நாமம், பச்சைமாலச்சுதானந்த கோவிந்தனெனப் பரவுதற்கரிய நாமம், ஆங்காரமாகவே திருநாமமலையி லன்புவைத் திருந்தநாமம், ஹரிநமோ நாராயணா வென்றுரைப்பவர்க்கரிய பெருதிருநாமமே. 10

திருநாமப் பதிகம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

பழனியங்கிரி அறுமுகர்

# திருநீற்றுப் பதிகம்

## ஆசிரிய விருத்தம்

கொண்ட கொண்டிட்ட வெகு சொரூபங்களுக்கழகு கொடுக்கச் சமைந்த நீறு, கொடிய வெண்ணாயிரஞ் சமணரைக்கழுவினிற் கொலைசெய்து கண்ட நீறு, துண்ட கண்டப்படக்கொடூர வெஞ்சூரனுடல் துணிக்கவேல் தொட்டநீறு, சொல்லரிய பூதப் பிசாசு பில்லி சூனியஞ் சுடரிட் டெரித்த நீறு, செண்டுப் போற் கயிலைமலையெடுத்தவன் கூன் முதுகு செவ்வையாய் நிமிர்ந்த நீறு, சிவபக்தியில்லாத முழு மூடர் நெஞ்சந் திடுக்கிடத் தொடுத்த நீறு, அண்ட நவகண்டமுதல் வணங்கித்துதித்திட ஆண்மையாய் வந்த நீறு, அடியவர்க்கருள் கிருபைபொழி பழனியங்கிரி யறுமுகவர் திரு வெண்ணீறே.
1

சம்பந்தராகவே தென்னவன் கூடலிற் சமணரையழித்த நீறு, சகலகுருபரனாக அரசனுக்கு வுபதேசந் தானாயுரைத் தநீறு, நம்பின அடியவர்கள் யீடேற வினையோட நாதனாய் வந்த நீறு, நாற்பத்தொண்ணாயிரம் ரிஷிகள் முனி சித்தர்கள் நம்பியே பூசு நீறு, கம்பமதயானை மாமுகவனுக்கிளையவன் கருதியே தந்த நீறு, காலனிட தூதனை நாடாமலென் னாளும் காக்கவே வந்தநீறு. அம்பிக்கை திருசூலிசுந்தரி சவுந்தரி அபிராமிவல்லிதந்த, அடியவர்க்கருள் கிருபை பொழி பழனியங்கிரி அறுமுகர் திருவெண்ணீறே.
2

அரவங்கள் பூதங்கள் மிருகங்கள் பேய்களை அடக்கவே யிட்டநீறு, அஷ்டபாக்கிய லட்சுமியிஷ்ட முடலென்னாளு மகலாம லிட்ட நீறு, இரவு பகல் மறவாமல் முருகர் திருநாமமே யிறைஞ்சித் தரித்தநீறு, எதிராளி நெஞ்சங் கலங்கிப் பயந்தோட யேற்கவேவிட்ட நீறு, பரவுபலபிணிகளும் உறவுகெடு கோள்களும் பணிந்தோட விட்ட நீறு, பஞ்ச பாதகமுடன் மிஞ்சிடும் வல்வினை பணிந்திட வணிந்த நீறு அரசனுடன் மந்திரியானபுவிவீரருமதிவசியமான நீறு, அடியவர்க்கருள்கிருபை பொழி பழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே.
3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பானதலமெலா மென்றுந் துதிப்பதற் கீடேற்றஞ் செய்யு நீறு, எங்கெங்கிருந்தாலு மேற்றிப் பணிந்திடவெதிராக நிற்கு நீறு திருப்பரங்குன்றமுஞ் செந்தில் கதிர்காமமுந் திருச்சோலைக்குகந்த நீறு, திருத்தணிகை சுவாமிமலை திருவே ரகம்புகழ் செவ்வே லர் தந்தநீறு பொருப்புகள் முடிதோறு பதகமலமுத் திரை புகழ்பெருகவந்த நீறு, பூசைசெய் யைவராற்றிருவா வினன்குடி போதிக்க வந்த நீறு. அருட்பாதம் நத்தியே நினைப்பவர்கள் நெஞ்சினில் அகலாதிருந்த நீறு, அடியவர்க்கருள் கிருபைமொழி பழனியங்கிரி அறுமுகர் திருவெண்ணீறே.

4

நூலைப்பகுத்த விடைமாதர்க்கு வேலாக நுதலிற்ற ரித்த நீறு, நூறுநூறாயிர மீமிசை வந்தாலு மொரு நொடியிற்றொலைக்கு நீறு, வேலைக்கடிந்து வெகு சூரர்கள் மடியவே வெற்றிவேல் தொட்ட நீறு, வேதனை சிறையிட்டு பிரணவத்துட்பொருள் விமலற்குரைத்த நீறு, வாலைப் பருவமாய் வயது நூறாகவே வசியகரமான நீறு, மாறாத செல்வமும் பேறான வாழ்வுடன் வரிசைதர வந்த நீறு, ஆலவாய்ச் சொக்கருடன் ஆனந்தத் தாண்டவம் ஆடிச் செழித்த நீறு, அடியவர்க் கருள் கிருபை பொழி பழனியங்கிரி அறுமுகர் திருவெண்ணீறே.

5

ஓராறு சென்னியு மீராறு புயமென்னுள்ளம் பதித்த நீறு ஓதுதமிழ் மதுரையிஊமைப் பெண்பேசவே உப தேசமான நீறு, காரானை முகவனுக்கிழையவன் விராலிமலைக் காங்கேயன் தந்தநீறு, கயிலைமலை யொரு நொடியில் அரனைவலா மாகவே காணவே வந்த நீறு, பேரான வசுரருங் குன்றமும் வேலாற்பொடிபடத் துணித்தநீறு, பொற்சந்தி மலையிலுறை வள்ளியுடநாயகன் பொன்னடி வணங்கு நீறு ஆறாடு செஞ்சடைக் கைலை நாய கனுமைக்கழகு பெறவந்த நீறு, அடியவர்க்கருள் கிருபை பொழி பழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தேச காலமும் முத்தைய ரென்னுமிவ் வேழைக் கிரங்கு நீறு, எழிலான கிருத்திகை தவறாமலனுஷ்டிக்க வின்பங்கள் தந்த நீறு, சிற்றிடை வள்ளியுடன் தினைப்புனங்காத்திடச் சிவசித்தாய் நின்ற நீறு, சிற்றூரு வேடர்கள் சிவபக்தராகவே திருவுருக் கொண்டநீறு, முத்தமிழ்க்காகவே அருணகிரி நாதருக்கு மோட்ஷங் கொடுத்த நீறு, முப்பத்து முக்கோடி தேவாதிதேவரும் முருகரென வந்தநீறு, அடியவர்க்கருள் நித்தம் விளையாடவ யகலாமலிட்ட நீறு. அடியவர்க்கருள் கிருபை பொழி பழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே.

7

வேதாளப் பூதப் பிசாசு பில்லி சூனிய மிரட்டித் துரத்து நீறு, வெண்டையந் தண்டையொடு கிண் கிணி சிலம்பசைய வீரவேல் தொட்டநீறு, சூதானகளபமுலை வள்ளியிட நாயகன் சுப்ரமணிய தந்தநீறு, தும்புருநாரதர் கம்புருடர் பொற்றித் துலங்கவே வந்தநீறு, ஓம் முருகாவென்று உள்ளமது குளிரவே உற்றதுணையான நீறு, ஓம் நமசிவாய குரு ஞானாதி தேசிகன் ஒலியாகி வந்தநீறு, ஆதாரமாகவே நெஞ்சினி லெப்பொழுது மறவாது நின்ற நீறு, அடியவர்க்கருள் கிருபை பொழி பழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 8

துஷ்டப்பிசாசு பிணிகிட்ட வெட்டமாலேசுடரிட் டெரித்த நீறு, சுற்றவே நிற்கின்ற அஷ்டதிசைபாலரும் சொல்லுமுன் வணங்குநீறு வட்டமாய்ப் படர்தேகம் பதினெட்டு குஷ்டமும் வாராமற் பூசு நீறு, வாளரவம் வண்டுகடி சிலந்தி தேள் விஷமெலாம் வாங்கவுமணிந்த நீறு, கொட்டமிடு சூரரை வெட்டி பலியிட்டு செயங்கொள்ளவே வந்தநீறு, கூறுமொழி நக்கீரர் மேன்மைபெற வேல்வாங்கி குன்றைப் பிளந்த நீறு அஷ்டதிசை பதினாறு முட்கோண சட்கோண மறுபத்து நாலு கலையும் அடியவர்க்கருள் கிருபை பொழி பழனியங்கிரி அறுமுகவர் திரு வெண்ணீறே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமலர் கமலத்துதித்தவன் கிளைவழி வாழ் விக்க வந்த நீறு, மன்னுபிர மாமுனி அகஸ்தியர் போகருடன் வழிகொள்ள வந்த நீறு, சரணமலரன் பனாங்குலாலகுலத் திருக்கை தண்டமிட்டுதவு நீறு, சண்முகநதிமூழ்கி கிரிவலம் வந்தோர்க்கு சகல பிணிதீர்த்த நீறு, வறுமைபடு மெளியார்க்குங் கொலை செய்த பாவிற்கும் வருவிதர மொத்த நீறு, வாழ்வு கார்த்திகை சோம சுக்கிர வாரஞ்சஷ்டி வந்திப் போர்க் கருளுநீறு, அருமறைகள் பரவுகுரு சிவசமயந் தழைக்கவேயவத ரித் தருளு நீறு, அடியவர்க்கருள் கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணிறே. 10

பத்தான கவிதையும் மனதிற்றுதிப்போர்க்குப் பாக்கியந் தந்தநீறு, பரிவாக யெந்நாளுஞ் சரவண பவா வென்ன பரிசு பெற வைக்கும் நீறு, கஸ்தூரி குங்குமம் கமழ் வள்ளி நாயகன் காங்கேயன் தந்த நீறு, கார்த்திகை நாள் தோன்றி வெற்றி வேலாயுதன் கடம்பனார் தந்தநீறு, முத்து நவரத்தினத் தண்டையணி பாதநன் முடிமேற்றரித்த நீறு, முழுநீல மயிலேறி வந்து முன் நின்றுமே முன்கையிற்றதிதநீறு, அத்தனாற் பங்கினிற் சத்துரு சங்காரியாய் அபிராமிவல்லி தந்த நீறு, அடியவர்க்கருள் கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 11

வட்டச்சடாட்சரச் சரவணபவா வென்று மதியிற்றுதிக்கும் நீறு, வாதாடிவந் தெதிர்த்திட்ட பூதங்களை மார்பைப் பிளந்த நீறு, இஷ்டமுடன் சரியையொடு கிரியையோக ஞான மேற்கவேதந்த நீறு. இன்பமாகவே கயிலைமலையேறி மோட்ஷத்திலிருக்கத் தகுந்தநீறு, எட்டுத் திசையதிரமயிலேறி யுலகைவலமிகைக்கு முன் வந்த நீறு, இமையவர் முனிவர்கள் தேவேந்திரனாதியர் யிடரழித்திட்ட நீறு, அஷ்டதிசை பெற்ற தீவேழு மீரேழுலகை யரசாள வந்தநீறு, அடியவர்க்கருள் கிருபை பொழிபழனி யங்கிரி அறுமுகவர் திரு வெண்ணீறே. 12

திருநீற்றுப் பதிகம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சுப்பிரமணியர் விருத்தம்.

மாமேவநவரத்னகேயூர மணிமகுட மன்னிப்பொலிந்த முடியும். வச்சிரநுதற்றிலக வெண்ணீறுமோ ராறுவதன விம்பத்தினழகும், பரமேவுபத்தர்க்குமடை திறந்தன் பொழுகு பன்னிரு விழிக்கருணையும், பகரரிய பழமறை பழுத்தொழுகு சிறு நகைப் பவளஞ்சிறந்த வாயும் காமேவு கரகமல பந்தியுஞ் சேவலுங்கனகமயிலுங் கிண்கிணிக் காலு முந்நாலும் வடிவேலு மென்மேலு மெக்காலுந் துலங்க வருவாய், தாமோதரானந்த கோவிந்தா வைகுந்த சரசகோபாலன் மருகா, சதுர்மறைகளே தந்தபரமகுருவாய் வந்த சரவண பவானந்தனே.

1

கண்கொண்ட பூச்சக்ரவாள கோளத்தையொரு கதிகொண்டெழுந்துசுற்றிக், ககன கூடத் தடவிபுக சண்டமா ருதக் காலொடு சுழன்றுபின்னி விண்கொண்ட மேகபடலத்தைச் சினந்துதன் மெய்யன்ப னெனவுகந்து, விடவரவின் மகுடமுடிசடசடென வுடறிநெடு மேருவொடு பாய்ந்து கொத்தித் திண்கொண்ட வல்ல சூர் நெஞ்சுபறை கொட்டத் திடுக்கிட விடித்து மோதித் திறைகொண்ட மயில்வாகனா, தண்கொண்ட நீலமலர் மாலையணிமார் பனே சரசகோபா லன் மருகா சதுர்மறைகளே தந்தபரமகுருவாய் வந்த சரவண பவானந்தனே.

2

துன்னுகயிலாயகிரி மேருகிரி கந்தமலை தோகைமலை கயிலைமலைவாள், சோலைமலை மேவிய விராலி மலை மன்னிய சுவாமி மலையுஞ் சிறந்த சென்னி மலை வேளூர் கடம்பமலை மேலவயல் திருவருணையின் கோபுரம் திருவாவினன்குடிபரங்கிரி திருத்தணிகை சிவசயிலந் திருவேரகம், இன்னிலமதிக்குந் திருச்செந்தூர் முதலான வெண்ணப்படாத கோடி எத்தலமுநின் கருணை வைத்து விளையாடல் விதமெத்தனை யெனச் சொல்லுவேன், தன்னை நிக ரொவ்வாத பன்னிருகை வேலனே சரசகோபாலன் மருகா, சதுர்மறைகளே தந்த பரம குருவாய் வந்த சரவணபவானந்தனே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியெங்கு மூழ்கித் தலந்தோறுஞ்சுற்றியு நல்ல நியமங்கள் செய்தும், நானென்ற வாண வந்தள்ளினோ மென்றுசிவ ஞானங்கள் பல பேசியும், கதி கொண்ட மவுனயட்டமா சித்தியொடு கற்பந்தனைப்புசித்தும், கண்ணிறுகமூடிச் சிவானந்த மென்று செயல் கண்டிருந்தோ மென்னவும், எதிரொருவருக் கொருவர்தர்த் கித்துமற்கட்டி யிப்படியனத கோடி, இதுவல்லரது வல்லவென்று போராடு வது மென்னவகையோவறிகிலேன் சதமென்று வுன்னை நானம்பினேன் நம்பினேன் சரசகோபாலன் மருகா, சதுர்மறைகளே தந்த பரமகுருவாய்வந்த சரவண பவா னந்தனே.

4

நாரதப் பிரமாதியமரர் கின்னரருகர் நாரணன் முதன் பண்ணவர், நடுக்கும் பொருந்திய விடுக்கண் களைந் திடநடக்குங் குழந்தை வயதில் சூரபத்மாசூரன் கயமுகன்தாருகன் துன்முகன் பானுகோபன், துட்டசிர சக்கிரவுஞ்சவசுரன் சிங்கனொடு சுற்றிய அரக்கரை யெல்லாம், கோரசங்கார ரணதூரளிபடலங் கொண்டு கூறாடியுனது வெற்றிக் கொடியேற இந்திரன் மணிமுடி ஏற வானொடு குடியேற வைத்த துரையே, தாரணியின் மேவு பரிபூரண வுல்லாசனே சரசகோபாலன் மருகா சதுர்மறை களே தந்த பரமகுருவாய் வந்த சரவணபவானந்தனே. 5

சீலமிகு நற்பனையுன்னித் ததேகத்தியானத் தெழுந்து பொங்கிச், சில்லென்று மெய்மறந்தானந்த மவுனஞ் செனிக்கக்குவிந்துகண்ணீர், ஆவிபொழியக் கருணை யுள்ளங் கனிந்துருக வன்புருக வெண்புருகவே அங்கங்குழைந்து புளகிக்க நின்று குருவாரப்படியு மொன்றறிவனோ, காலங்கழித் துண்டு வீணுக்கலைந்து பலகாலப் பிரபஞ்சமாய்க் கடற்குட்படிந்தே கிடக்கின்ற பாசங் கடக்கும் படிக்கருளுவாய், தாலமுழுதுண்டு நிலைகண்ட கோதண்டமால் சரசகோபாலன் மருகா, சதுர் மறைகளேதந்த பரமகுருவாய் வந்த சரவண பவானந்தனே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியெங்கு மூழ்கித் தலந்தோறுஞ்சுற்றியு நல்ல நியமங்கள் செய்தும், நானென்ற வாண வந்தள்ளினோ மென்றுசிவ ஞானங்கள் பல பேசியும், கதி கொண்ட மவுனயட்டமா சித்தியொடு கற்பந்தனைப்புசித்தும், கண்ணிறுகமூடிச் சிவானந்த மென்று செயல் கண்டிருந்தோ மென்னவும், எதிரொருவருக் கொருவர் தர்க்கித்துமற்கட்டி யிப்படியனத கோடி, இதுவல்லரது வல்லவென்று போராடு வது மென்னவகையோவறிகிலேன் சதமென்று வுன்னை நானம்பினேன் நம்பினேன் சரசகோபாலன் மருகா, சதுர்மறைகளே தந்த பரமகுருவாய்வந்த சரவண பவா னந்தனே.

7

நாரதப் பிரமாதியமரர் கின்னரருகர் நாரணன் முதன் பண்ணவர், நடுக்கும் பொருந்திய விடுக்கண் களைந் திடநடக்குங் குழந்தை வயதில் சூரபத்மாசூரன் கயமுகன்தாருகன் துன்முகன் பானுகோபன், துட்டசிர சக்கிரவுஞ்சவசுரன் சிங்கனொடு சுற்றிய அரக்கரை யெல்லாம், கோரசங்கார ரணதூரளிபடலங் கொண்டு கூறாடியுனது வெற்றிக் கொடியேற இந்திரன் மணிமுடி ஏற வானொடு குடியேற வைத்த துரையே, தாரணியின் மேவு பரிபூரண வுல்லாசனே சரசகோபாலன் மருகா சதுர்மறை களே தந்த பரமகுருவாய் வந்த சரவணபவானந்தனே. 8

சீலமிகு நற்பனையுன்னித் ததேகத்தியானத் தெழுந்து பொங்கிச், சில்லேன்று மெய்மறந்தானந்த மவுனஞ் செனிக்கக்குவிந்துகண்ணீர், ஆவிபொழியக் கருணை யுள்ளங் கனிந்துருக வன்புருக வெண்புருகவே அங்கங்குழைந்து புளகிக்க நின்று குருவாரப்படியு மொன்றறிவனோ, காலங்கழித் துண்டு வீணுக்கலைந்து பலகாலப் பிரபஞ்சமாய்க் கடற்குட்படிந்தே கிடக்கின்ற பாசங் கடக்கும் படிக்கருளுவாய், தாலமுழுதுண்டு நிலைகண்ட கோதண்டமால் சரசகோபாலன் மருகா, சதுர் மறைகளேதந்த பரமகுருவாய் வந்த சரவண பவானந்தனே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகாம மோக முறுதிமிங் கலமிக்க தனலோ பவன முதலையாந், தர்கோபமனல்வடவைமுடத்துவம் பரவி சஞ்சல மெனுந் தரங்கம் அரியவெளிலொருகுமிழி அஞ்ஞான வாரிதியில்லைகின்ற ஜீவராசி, அத்தனையு மீனினமே மனொரு வீசுவலையவ்வுயிரில் யானுமொருவன், கருதரிய பாரப்பெருங்கடல் கடந்தே கடைத்தேற வேணுமென்றால், கைத்தவளையில்லை யினியென் செய்கு வேனுனது, காற்றவளை கைப்பற்றினேன், சாரியமர்செய்நெடிய படைசூரகெஜசிங்கமே சரசகோபாலன் மருகா சதுர் மறைகளேதந்தபரம குரு வாய்வந்த சரவண பவானந்தனே. 10

தூயபொறி யைந்தையு மடக்கிப் புலாதிகள் சுழல்கின்ற வழிமறித்துச், சுழிமுனை திறந்து மூலாதாரமே லாந்துவாத சாந்தத்தை மூட்டி, வாயுவை யிறுக்கிப் பெலத்துவரு குண்ட லியை வவ்விமேற் கொண்டெடுத்துவாசியை நடத்தியவ் வாசையைத் தானென்று வழிகொண்டு நாதவெளியில் தோயும் பரப்பிரமபூரண விலாசமிது சோதிப்பதென்ன வெளிதோ, தொலையாது நிலையாத தாகையாலுன் பதந்துணையே துணைப்பற்றினேன் தாயாக மனோகர மயூரவாகன முருக சரச கோபாலன் மருகா, சதுர்மறைகளே தந்த பரம குருவாய் வந்த சரவண பவானந்தனே. 11

கண்ணேறு வாராது பிணியொன்றும் சேராது கவலைப்படாது நெஞ்சங் கலியாது சலியாது நலியாது மெலியாது கலியென்றபேயடாது, விண்ணேறுமணுகாது, கன்ம வினைதொடராது, விஷமச்சுயம் வராது, வெய்ய பூதம்பில்லி வஞ்சனைகடொடரா விஷம்பரவு செந்துமடரா, எண்ணேறு சனங்கள் கிடையாது சாலபய மெள்ளளவு மேயிரா திவ்வேழைக்கிரங்கியருள் தெய்வ முனையல்லாம லின்னமொரு தெய்வமுளதோ, தண்ணேறு கங்கைமலை மங்கையருடங்கமே சரசகோபாலன் மருகா, சதுர்மறைகளே தந்த பரமகுரு வாய்வந்த சரவண பவானந்தனே. 12

சுப்பிரமணிய விருத்தம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சனி பகவான் தோத்திரம்

## காப்பு - வெண்பா

தேவரெண்டிசைக்கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை - மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் கதைபுகலக்
காரணிந்த யானை முகன் - காப்பு

1 ஆதிவே தாந்தமுத லறியஞான
மைந்தெழுத்தினுட் பொருளையயன்மாலோடு
சோதிசிற்றம்பலத்தி லாடிநின்ற
சுடரொளியை நீ பிடித்த தோஷத்தாலே
பாதிமதி சடைக்கணிய வரவம்பூணப்
பதியிழக்கச் சுடலைதனிற் பாடியாடச்
சாதியில்லா வேடனெச்சிற்றின்னவைத்த
சனியனே காகமேறுந் தம்பிரானே.

2
வேலவனை வேங்கைமர மாக்கிவைத்தாய்
விறகு கட்டிச் சொக்கர் தலைவிற்கவைத்தாய்
மாயவனை யுரலொடு கட்டுவித்தாய்
வள்ளிதனைக் குறவரிட வனத்தில் வைத்தாய்
காலணமார்க் கண்டனுக்காவரனுதைத்த
காரணமும் நீ பிடித்த கருமத்தாலே
சாலவுனையான்றொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந்தம்பிரானே

3
மஞ்சுதவழயோத்தியில் வாழ்தசரதன்தன்
மக்களையும் வனவாச மாக்கிவைத்தாய்
பஞ்சவர்கள் சூதினால் பதியிழந்து
பஞ்சுபடும்பாடவர் படச்செய்வித்தாய்
எஞ்சலிலா வரிச்சந்திரன் பெண்டைவிற்றே
யிழிகுலத்திலடிமையுற விசையவைத்தாய்
தஞ்சமெனவுனைப் பணிந்தேனெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டமாயிரத்தெட்டு மரசு செய்த
வடல்சூரபத்மனையும் மடக்கிவைத்தாய்
மண்டலத்தையாண்ட நளசக்கரவர்த்தி
மனைவியோடு வனமதனிலலையச் செய்தாய்
விண்டலத்தை பானுகோபன்றன்னாலே
வெந்தணலாய்ச் சூரரை வெருவச்செய்தாய்
தெண்டனிட்டேனெந்நாளு மெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

4

அண்டர்கோன்மேனியிற் கண்ணாக்கி வைத்தாய்
அயன் சிரத்தை வயிரவனா லறுக்க வைத்தாய்
தண்டிறல் கொள் கௌதமனாலகலிகைதான்
சிலையாகச்சாப முறவேசெய்தாய்
தண்டரன நகையிரதி மாரன்றன்னைச்
சங்கரனார் முதல்விழியிற் றணல்செய்வித்தாய்
சண்டமிலா துனைத்தொழுதே னெனை தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

5

பாருலவு பரிதியைப் பல்லுதிரவைத்தாய்
பஞ்சவருக்குத்தூது பீதாம்பரனை வைத்தாய்
தாருளவுவாலிசுக்ரீவன் தம்மைத்
தாரையினாற்றீராத சமர்செய்வித்தாய்
சூரனெனுமிலங்கை ராவணன்றங்கை
சூர்ப்பனகிமூக்குமுலை துணிசெய்வித்தாய்
தாரணியுமணிமார்பா வெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்ரன் றன் கண்ணிழந்தான் லங்கையாண்டு
துலங்கும்ராவணன் சிரங்கண்டிக்கவிழ்ந்தான்
மிக்க புகழ்ரணியன் வீறழிந்தான்
விளங்குதிரி புராதிகளும் வெந்துமாண்டார்
சக்கரத்தாலுடலறுத்தான் சலந்திரன்றான்
தாருகாசுரனுமே சமரில் மாண்டான்
தக்கன் மிகச்சிரமிழந்தா னின்றோஷத்தாற்ச்
சனியனே காகமேறுந் தம்பிரானே 7

பாருலவு பரிதியைப் பல்லுதிரவைத்தாய்
பஞ்சவருக்குத்தூது பீதாம்பரனை வைத்தாய்
தாருளவுவாலிசுக்ரீவன் தம்மைத்
தாரையினாற்றீராத சமர்செய்வித்தாய்
சூரனெனுமிலங்கை ராவணன்றங்கை
சூர்ப்பனகிமூக்குமுலை துணிசெய்வித்தாய்
தாரணியுமணிமார்பா வெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. 8

சுக்ரன் றன் கண்ணிழந்தான் லங்கையாண்டு
துலங்கும்ராவணன் சிரங்கண்டிக்கவிழ்ந்தான்
மிக்க புகழ்ரணியன் வீறழிந்தான்
விளங்குதிரி புராதிகளும் வெந்துமாண்டார்
சக்கரத்தாலுடலறுத்தான் சலந்திரன்றான்
தாருகாசுரனுமே சமரில் மாண்டான்
தக்கன்மிகச்சிரமிழந்தா னின்றோஷத்தாற்ச்
சனியனே காகமேறுந்தம்பிரானே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதைதனை யிராவணனாற் சிறைச்செய்வித்தாய்
தேவர்களைச் சூரனாற் சிறைசெய்வித்தாய்
மாதுதுரோபதை துயிலைவாங்குவித்தாய்
மகேச்சுரனையுமைபிரியும் வகைச்செய்வித்தாய்
போதிலயன்றாளிற்றளை பூட்டுவித்தாய்
பொதிகையினிலகத்தியனைப் பொருந்தச் செய்தாய்
தாதுசேர் மலர்மார்பா வெனைத்தொடாதே
சனியனே காகமேறுந்தம்பிரானே 10

அப்பர்தமைக் கருங்கல்லோ டலையிற்சேர்த்தாய்
அரனடியில் முயலகனை யடங்கச் செய்தாய்
செப்பு மாணிக்கர் தமைச் சிறையிலிட்டாய்
ஸ்ரீராமனைச்சவுரு வெடுக்கச் செய்தாய்
ஒப்பிலனுமான் வாலி லொளிதீயிட்டாய்
ஒலிகடலினஞ்சையர னுண்ணவைத்தாய்
தப்பிலா துனைத்தொழுதேனெனைத்தொடாதே
சனியனே காகமேறுந்தம்பிரானே. 11

நீரினையுண்டெழுமேக வண்ணாபோற்றி
நெடுந்த பத்தி லறுகமலக் கண்ணாபோற்றி
சூரியன் தவத்தில் வந்த பாலாபோற்றி
துலங்குநவக் கிரகத்துன்மேலா போற்றி
காரியன் பெயர்களுபகாரா போற்றி
காசினியிற் கீர்த்திப் பெற்ற தீராபோற்றி
மூரிகொளு நோய்முகாவாமுடவா போற்றி
முதுமகளின் முண்டகத்தாள் போற்றி போற்றி
சனியனே காகமேறுந்தம்பிரானே. 12

**சனிபகவான் தோத்திரம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோத்திரம்

## காப்பு - வெண்பா

மண்ணுயிர் கட்கனைத்துமாறாததளித்துநல
நண்ணுநவக்கிரகநண்புசொல் - தண்ணுலவு
திங்களணி தங்குமுயர் செஞ்சடையருண்மகிழ்சேய்
கங்கையருளைங்கரனார் காப்பு.

**சூரியன்** :- காசினியிருளை நீக்குங் கதிரொளியாகி யெங்கும் பூசனை யுலகோர் போற்றப் புசிப் பொடுசுகத்தை நல்கும், வாசியேழுடைய தேர் மேல் மகர கிரிவலமாய் வந்த தேசிகா வெனைரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி

**சந்திரன்** :- அலைகடல்தனினின்று மதியும் வந்துதித்த போது, கலைவளர் திங்களாகக் கடவுள் ரெவருமேத்துஞ் சிலைமுத லுமையாள் பங்கன் செஞ்சடைபிறையா மேரு, மலைவல மாகவந்த மதியமே போற்றி போற்றி.

**செவ்வாய்** :- வசனநற்றைரியத்தோடு மன்னர் சபையில் வார்த்தை புஜபலராக்கிரமங்கள் போர்தனில் வெற்றி யாண்மை, நிஜமுடனவரவர்க்கு நீணிலந்தனிலளிக்குங் குலனில் மகனாஞ் செவ்வாய் குறைகழல் போற்றி போற்றி.

**புதன்** :- மதனநூல் முதலா நான்கு மறை புகல் கல்வி ஞானம், விதமுடனவரவர்க்கு விஞ்ஞைக ளருள்வோன் றிங்கள், சுதன் பவுசு பாரிசுகம்பல கொடுக்க வல்லன் புதன்கவி புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி

**குரு** :- மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க்கரசன் மந்திரி, நறைசொரிகற் பகப்பொன்னாட்டினுக் கதிபனாகி நிரைதனஞ்சிவிகைமண்ணி வீடுபோக்த்தை நல்கு, மிறையவன் குருவியாழ மிருமலர்ப்பாதம் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுக்கிரன்** :- மூர்க்கவான் சூரன் வாணன் முதலானோர் குருவாய் வையங் காக்கவான்மழை பெய்விக்குங்கவிமகன் கனகமீவோன், தீர்க்க வானவர்கள் போற்றச் செத்தார்தமை யெழுப்பும் பார்க்கவன் சுக்ராச்சாரி பாதபங்கயமே போற்றி.

**சனி** :- முனிவரர்க டேவரேழு மூர்த்திகள் முதலினோர்கள், மனிதர்கள் சகலவாழ்வின் மகிமையதல்லாலுண்டோ, கனிவுள தெய்வம் நீயேகதிர் சேயே காக மேறுஞ் சனியனே யுனைத் துதிப்பேன் தமியனேற்கருள் செய்வாயே.

இராகு :- வாகுவார் நெடுமான் முன்னம் வானவர்க்க முதமீயப் போகுமக்காலையுன்றன் புணர்ப்பினாற், சிறமேயுற்றுப் பாகுசேர் மொழியாள் பங்கன் பரன்கையில் மீண்டும் பெற்ற, ராகுவே வுனைத்துதிப்பேன் ரட்சியும் ரட்சிப்பாயே.

கேது :- பொன்னையி னுரத்திற் கொண்டேன் புலவர் தம் பொருட்பாலாழி, தன்னையே கடைந்து முன்னத்தண் ணமுதளிக்கலுற்ற, பின்னைநின் சுரவானுண்ட பெட்பினிற் சிரம்பெற் றுய்ந்தாய் யென்னையாள் கேதுவே யிவ்விரு நிலம் போற்றத்தானே.

**பொது**

சூரியன் சோமன் செவ்வாய்
சொற்புதன் வியாழன் வெள்ளி
காரியசனி இராகுகேது
கடவுளரென்பனாமத்
தாரியல் சக்கரத்தைத்
தரித்திரர் பூசித்தாலும்
பாரினிற்புத்திர ரருண்டாம்
பாக்கியம் நல்குந்தானே.

**நவக்கிரக தோத்திரம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 1

என்போடு கொம்பொடாமை யிவைமார்பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொடாறு
முடனாய் நாள்க ள்வைதாய்
அன்பொடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையொடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் முருமிடியுமின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னொடு முடனாய்
நாண்மலர் வன்னி கொன்னை நதிசூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 6

செப்பிள் மலை நன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தம்
வினையான வந்து நலியா
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்றனொடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய் வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான் முக னாதியாய் பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக சுவாமி பேரில்

## அலங்கார விருத்தம்

சந்திரா முருகா நல்லதந்திர முருகா ஞானசற்குரு நாதமுருகா சாரி முருகா வறுமைதீரு முருகா சுவாமி சச்சிதானந்த முருகா, சுந்திர முருகா மயிலுகந்தமுருகா எங்கள் சூரசங்கார முருகா ஜோதி முருகா ரத்னவேதி முருகா நிதந்தேவர்கள் துதிக்கும் முருகா வரந்தந்து காத்தருள முருகா, வாரு முருகா, கிருபைதாருமுருகா உந்தன் மைந்தனைக் காருமுருகா, அந்த முருகா சக்தி மைந்த முருகா, யெங்கு மழகான நீதிமுருகா, ஆறு முருகா குறை தீரு முருகா பழனி ஆனந்தமான முருகா.

1

செய்யுமுருகா யீராறுகையுமுருகா தேவர் செல்வனாய் வந்த முருகா, செட்டிமுருகா, தங்கக் கட்டி முருகா குலதேவாதி தேவ முருகா, மெய்ம்மை முருகா மயிலேறுமுருகா, செய்த வினைதீர்க்கு நல்ல முருகா வேலு முருகா யென்னை யாளுமுருகா சீடர் வேண்டுவர மீயுமுருகா தையல் வள்ளிமுருகா அம்புஎய்யு முருகா சகலகலையோதுமுருகா, ஐய்ய முருகா சோதி வையமுருகா வீர அசுரரைநீவென்ற முருகா துய்யமுருகா சுயஞ்சோதி முருகா தபத்தோர் தொழுமாதி முருகா ஆறுமுருகா குறை தீரு முருகா பழனி ஆனந்தமான முருகா.

2

பொன்னுமுருகா, பாதுகாக்கு முருகா திருப்புகழ் யோதி யுன்னை முருகா, போற்று முருகா வனங்காத்த முருகா வள்ளிபொற்புய மணைந்த முருகா, கன்னி முருகா மெய் சொன்ன முருகா யென் கலியெல்லாம் தீர்த்த முருகா, சாந்தி முருகா தணிகை வாழ்ந்த முருகா சிவகைலாசநின்ற முருகா மன்னர் முருகா மணி மின்ன முருகா வேங்கை மரமாக நின்ற முருகா, மயிலுமுருகா, மொழிகுயிலு முருகா, தேவர் மகிழும் சங்கீத முருகா, அன்ன முருகா பஞ்சவர்ண முருகா வுந்தன்யடியவர்க்குதவு முருகா, ஆறுமுருகா, குறை தீருமுருகா பழனி ஆனந்தமான முருகா. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மை முருகா தம்மை காக்கு முருகா விருது சேவலங் கொடிய முருகா செல்வமுருகா யினிய நல்ல முருகா யெங்குஞ் சோதியாய் நின்ற முருகா நன்மை முருகா லோக மேன்மை முருகா திரு நாரணன் மருக முருகா, ஞான முருகா அரிதான முருகா திவ்ய நாகமணி யான முருகா வன்மை முருகா, யெனக்குண்மை முருகா, வரமகிழ்ந்தருள்தாரு முருகா, வால முருகா, நீ பாலமுருகா, வள்ளியம்மை முருகா எந்தன் வேதனை யடியோடு கருவறுக்கு முருகா ஆறு முருகா குறைதீரு முருகா பழனி ஆனந்தமான முருகா. 4

சாரிமுருகா விந்தை யுரைசெய்யு முருகா யிதுசமயம் வரமருளு முருகா, சத்தி முருகா வுமையாள் பெற்ற முருகா யிந்ததரணிபுக ழோதுமுருகா கௌரி முருகா நல்ல சரவண முருகா எந்தன் கிலேசமுந் தீரு முருகா, கீர்த்தி முருகா, சிறை மாற்று முருகா, மனதுக் கேற்றவரமீயு முருகா தவன முருகா உந்தன் தயவு முருகா, என்னைக் கடைத்தேறப் பாருமுருகா, காசி முருகா முன்னில் பேசு முருகா வீரகபாலகாலசூல முருகா, அவனி மருகா, லோக பழனி முருகா தேவர்க்கருள் மயமான முருகா, ஆறுமுருகா குறைதீரு முருகா பழனி ஆனந்தமான முருகா. 5

தெள்ளு முருகா குறை சொல்லு முருகா செவியில் கேட்க வில்லையோ முருகா, தேனுமுருகா வரவேணுமுருகா மயிலில் தெரிசனந்தாரு முருகா வள்ளல் முருகா பொன்னு வள்ளி முருகா, சரணம் வந்து காத்தருளு முருகா வாய்ந்த முருகா, நிதம்போற்ற முருகா, ஒருமரமாயிராதே முருகா, சொல்லு முருகா சுற்றி நில்லு முருகா, ஒளிதுலங்கு நவரத்ன முருகா, சோலை முருகா வடிவேலு முருகா, வேண்டி தொழுபவர்களுக் கருளு முருகா அல்லு முருகா பகல் நல்ல முருகா, காமியாம் கவிக்குறவு முருகா, ஆறுமுருகா குறைதீரு முருகா, பழனி ஆனந்தமான முருகா. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகசுவாமி
## ஆசிரிய விருத்தம்

1 ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலும் அலங்கார வாபரணமணிந்தமார்பும் திருமுகமும் வெண்ணீறும் புனைந்த மெய்யும் செகமெலாம் புகழ்படைத்த சுப்பிர மணியா, முருகா சரவணபவனே கார்த்திகேயா முக்கண ணார் புத்திரனே உக்கிர வேலா இருவருமேயுனைப் பணிந்தோம் பழனிவேலா யிதுசமய மடியாரை ரட்சிப்பாயே.

2 மயிலேறி விளையாடுஞ் சுப்பிரமணியா வடிவேலாவுன் பாதம் நம்பினேனே, உயிரிழந்து அபகீர்த்தியாகும் வேளை உன் செயலா லிதுசமயமுயிரைக் காப்பாய், தயவாக வினிமேலும் உயிரைக்காத்துச் சண்முகனே அடியார்தந் துயரந் தீர்ப்பாய், வைபோக மானமலை பழனி வேலா வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

3 வருந்துமடியாருயிரைக் காக்குந் தெய்வம் வையகத்தில் வேறொருவ ரில்லையென்று அறிந்து நான் உனைப்பணிந்தேன் சுப்பிரமணியா ஆதரித்துப் பிராணபயந்தீருமையா திரிந்தலைந்து அறு மூன்று தினங்களாகச் சிறையிருந்து தளைப்பூண்டு சின்னமானேன் பறந்துவரு மயிலேறும் பழனிவேலா பண்பாக வுயிர் காத்து ரட்சிப்பாயே.

4 பெருவேங்கை புலிபிடித்த பசுவைப் போல் பிதுர்க்கலங்கி மனம் தளர்ந்து புலம்பினோமே, யிருவருமே உனைக்கூவச் செவி கேளாதோ, விதுசமயந்தாமதமா யிருக்கலாமோ, குருவாகித் தந்தை தாய் நீயேயாகில் குமரேசா பிராணபயந் தீருமையா முருகேசாவிதுசமயம் பழனிவேலா முன்வந்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

5 பாம்பின் வாய் சிக்கியதோர் தேரைபோலப் பதைபதைத்து வாடுகிறோம் பாலர் நாங்கள் தேம்பியே புலம்புகிறோம் துயரமாகித் தென்னவனேயுன் செவிக்கு கேளாதோ தான், நான் புவியிலுனை நம்பி மகிழ்ந்திருந் தேன் நாயேனுக்கபாயம்வர நியாயமோ தான், சாம்பசிவன் புத்திரனே பழனி வேலாசமயமிது உயிர்காத்துரட்சிப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 நாகமது கெருடனை கண்டலைந்தாப்போல் நான் பயந்து அலைதுரும்பாய் அலைகிறேனே, தாகமது தீருமையா தவிக்கும் வேளை சண்முகனே யிதுசமயம் அடியேனுக்கு மேகமது பயிர்க்குதவி செய்தாற்போல வேலவனே பிராணபயந்தீருமையா, வேகமுடன் வரவேணும் பழனி வேலா வினைதீர்த்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

7 பூனைக்கையில் சிக்கியதோர் கிளியைப்போலப் புலம்புகிறோம் பிராணபயமிகவுமாகி, நானடிமையும்மை நம்பி யிருக்கும் வேளை நாயகனே பாராமுகமாய்ப் பார்க்கலாமோ, மானீன்ற வள்ளியம்மை தெய்வானை மணவாளா சரவணனே கருணைசெய் வாய், கானமயில் வாகனனே பழனிவேலா கடவுளே உயிர்காத்து ரட்சிப்பாயே.

8 தூண்டிலகப்பட்ட உயிரது போல் துடிக்கிறேனே சுப்பிரமணியா விதுசமய மடியேனுக்கு, வேண்டுவரங்கொடுப் பதற்குப் பார்த்து நீயே வேறொவரில்லையென்று நம்பினேனே, மீண்டு வரும் வினைதீர்த்துக் துயரந்தீர்ப்பாய் வேலவனே சூரசம்மார சிங்கார வேலா ஆண்டவனே யுனை பணிந்தேன் பழனி வேலா அடியார்க ளுயிர்காத்து ரட்சிப்பாயே.

9 நஞ்சுப்பட்டு விஷமேறி மயங்குமா போல் நடுநடுங்கி கிடுகிடுடென்று பயந்து நாங்கள், தஞ்சமென்றே யுனைப்பணிந்தோம் திருத்திணிகைவாசா சற்குருவே பிராணபயம் தீருமையா, வஞ்சகனைச் சிறைவிடுத்துத் தலையை வாங்கிப் பரிகரித்துப் பதமேதந்து, வஞ்சனைகள் செய்யாமல் பழனிவேலா வரமளித்துயிர்காத்து ரட்சிப்பாயே.

10 அத்திமுகனே முக்கண்ணனுக் கிளைய வேலா அறுமுகனே தணிகையிலே அமர்ந்தவாசா, வித்திரத்திற் பேசாத மூடனானும் வேலவனே நின்னருளால் கவியைப் போலே, பத்துமே பதிகமாய்ப் பாடிச் சொன்னேன் என்மீதில் பிழைகள் மனம்பொறுத்தே யாள் வாய், சத்தியமா யுனைப் பணிந்தோம் எங்களையா சண்முகனே யடியாரை ரட்சிப் பாயே.

ஆறுமுகசுவாமி விருத்தம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தணிகாசலர் பஞ்சரத்தினம்

சீர்புகழும் சென்னைபுரி திருவல்லிக்கேணி நகர் செங்குந்தர் வீதிவாழும், சிவனருள் பாலனே சிவ சுப்பிர மணியனே சிவகாமித் தவப்புதல்வனே, கார்புகழும் போரூ ரிலசுலர்குலம் வேரறக் கண்டித்த கதிர் வேலனே, கனக மயிலேறி வரும் தெய்வயானை பாகனே கனகவள்ளி நாயகனே, பார்புகழுமுன தன்பருளங் சிறையிட்டு மாய தொருபாகனே பழனி மலை வடிவேலனே, தார்புகழும் மாயனிட தங்கையுடமைந்தனே ஜனகன்மகட்பதி மருமகனே, தக தகென மயிலேறி திருநடன மாடிவருந்தணிகாசலக் கடவுளே.

1

சித்திர விணோதமுடன் திகழான சென்னையில் சிறப்பான பன்னிருகையும், திருமுடியில் மகுடமும் சுட்டியும் பட்டமும் திருநீற்றுக்காப்புமழகும், இரத்தினக் கடுக்கனும் புஜகீர்த்தி பளபளென்ன ரவிதைக் கண்டி கைமார்பினில், ரஜித்திருமேனியும் உச்சிதப்பூநூலும் இலட்சண முகத்தி னழகும் நெற்றியிற்றிலகமும் நிகக்கன வடிவேலும் நிறைந்த வொட்டியாணமழகும், நிகரான தண்டையும் நீலமயில் சேர்வையும் நின்பெருமைசொல்ல வெளிதோ, தத்திவருஞ் சூரனை துளைத்து நீயமர் செய்த தயாபரமான துரையே தககதென மயிலேறி திருநடன மாடிவருந் தணிகாசலக் கடவுளே.

2

ஓராருமுகமாட யீராறுபுசமாட வோங்குவடி வேலுமாட, உச்சிதக்குண்டலமும் கச்சிதமுடியாட ஒளியான சுட்டியாட பாராட தண்டையும் பாதச் சிலம்பாடப் பணிந்திடும் பக்தராடப் பன்னிருக்கரமாடப் பணிந்த பூஷணமாட பவள வெண்குடைகளாடத் தேராதமயிலாடக் கோழித்துவச மாடத்துலங்கு நீர்க்காவியாட தொண்டர்கள் முதலான சண்டிகேஸ்வரராட தொந்த நவவீரராட, தீராத தவ முனிவர்தானாட நீயாடி தமியனேன் முன்பு வருவாய், தகதகென மயிலேறி திருநடன மாடி வருந் தணிகாசலக் கடவுளே.

3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைதாய் தெய்வமும்நீயே கெதியலாமல் தற்காக்க வொருவரில்லை தைரியஞ்சொல்லவம் பயமது தீர்க்கவும் தரணியிலெவருமில்லை சந்ததமும் நால்வேத முன்னையே புகழ்ந்தே சரணாகதி யென்றவர்க்கு, சாலோக சாமீப சாரூப மேலான சாயுச்சியந் தந்த குருவே, வந்தனம் செய்ய முனதன்பர்க் கிரங்கிநீ வன்மையுடன் வரமளிப்பாய் வள்ளி தெய்வானையுடன், வாழு மயிலேறியே வரவேண்டு மெந்தனருகே, தந்திர முகுந்ததிரு மாயனிடமருகனே தற்பரா நந்த பரனே, தகதகென மயிலேறி திருநடனமாடிவருந் தணிகாசலக் கடவுளே.

4

நஞ்சுண்ட பரமகுரு வானதொரு தெய்வமே நாதனே குமரகுருவே நாயகாயுனைவிட வேறு துணையில்லை யெனையாதரிப்பவருமில்லை, பஞ்சையும் நானென்ன பாவங்கள் செய்தேனோபரதவித் திடவு நீதான் பராதிருப்பதுந் தர்மமோ வுந்தனைப் பார்த்தவர்களேசார்களோ, கொஞ்சமென்றெனை நீவிட்டு விட்டாலுங் குழந்தை நான் விடுவதில்லை, கோபமோ யென்மீதிற் தாபமோயென் செய்வேன் கொத்தடிமை கொண்ட முருகாதஞ்ச மென்றேயுனை கெஞ்சியே வருந்திடத் தற்கார்த் தருள் புரிவாய் தகதகென மயிலேறி திருநடன மாடிவருந் தணிகாசலக் கடவுளே.

5

# ஆறுமுக சுவாமி பஞ்சரத்தினம்

திருவருளும் சென்னை புரி தெய்வப் பிரகாசனே சிவகாமித் தவப்புதல்வனே சிங்கார வேலவனே கதிர்காமத் தையனே, தெய்வானை குணநேயனே மருவமலரணிகின்ற வள்ளிக்குகந்தவனே வையாபு ரித்தலைவனே மயிலேறும் வீரனே சூரசம்மாரனே மாயவன் நல்மருகனே, தருவிற் பழுத்த கனிக்காக வொருநொடியிற் பூவுலகம் வந்த சம்மாரரனே சங்கரி கொடியிட தவமீதினாலுத்தித்திடும் சரவணக் குருகந்தனே, அருமையுடன் வருகுவாய் மயிலேறுமையனே கதிர்காம முத்தையனே ஆறுமுகமான திருநீறு வொளியான வருளாறு முகமான குருவே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரன் தனக்குமிக வுபதேசஞ் சொல்லியே சகலருக் கமிர்தமீந்தாய் சாட்சாதி வேடர்மகள் வள்ளியின் கொல்லையில் தனிவேங்கைமர முமானாய் எங்கும் புகழாக வேயசுரரரரைச் சம்மரித்திந்திரனுக்குதவி செய்தாய், ஏகாந்தமாகவேதென் பழனிபுரியினிலிடர் தீர்க்க வந்த முருகா மங்களகமான தணிகை திருப்போரூரில்வாழ் மயில்உதனிலமர்ந்தாய், மனுநீதி தவறாத கோடான கோடி பேர்வணங்கினோர்க்குதவி செய்தாய், அங்கமும் கலங்கியே நொந்துயான் தவிர்க்கும் வேளை யப்பனே முன்பு வருவாய் ஆறுமுகமான திருநீறுவொளியான வருளாறு முகமான குருவே.

2

ஏதுமறியேனொன்று மிணக்க மறியேன் சற்று மினையடிகள் போற்றவறியேன், எத்தேசகாலமும் பக்தர்களைப் பூசித் திணக்கத்துடன் தொழுதுமறியேன், நீதியறியேன் சுத்த நிஷ்டையறியேன் சற்றும் நிலைகண்டு புகழவறியேன், நெடுநாளாயுன் கோயில் வலமாக வந்து நானின்று பூசித்து மறியேன், வேதமறியேன் நூல்விளக்க மறியேன் பூரணவேதாந்த முடிவுமறியேன், வினைசெய்த பாவிக்குத் துணையாக நீவந்து வேண்டின வரந்தருகுவாய், ஆதிவடி வேராசயோகவடிவே நித்திய யருளமுத மானவடிவே, ஐயனே யுனதன்பருக் கருள் தருவாய் ஆனந்த வடிவேலனே, ஆறுமுகமான திருநீறு வொளியான வருளாறு முகமான குருவே.

3

ஏனோதான் நான் செய்த பாவவிதி கர்மமோ எளியனிட கால பலனோ, எண்ணாமல் முன்னோரைப் பேசினகர் மமோ எளியோரைப் பழித்தவிதமே தானாகப் பூமியில் வழக்கோரஞ்செய்தேனோ சத்ராதி கோபமுறையோ, தாரணியில் கவிபாடும் புலவரைத் தடுத்தேனோ தாய்க்கு யென்பழிசெய்தேனோ, மானாசனமிடும் மறையர் கொலை செய்தேனோ, மங்கையர்கள் சாபமிதுவோ, பாராமல் முன் செய்த பாவத்தை நீக்கியே மைந்தர்க்கு வரந்தருகுவாய் ஆனாலுமெங்கள் முன்வருகுவாய் மயிலேறு மையனே கதிர்வேலவா, ஆறு முகமான திருநீறு வொளியான வருமாறுமுகமான குருவே.

4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலு மசைந்தாட வீரகிண் கிணியாட வெண்டையங் குலுங்கியாட, விதமான காலினில் தண்டைச் சிலம்பாட வேதாந்த குடைகளாட, நாலுமறைகள் யாடக் கோழித்துவ சமாட நாதாந்தப் பொருள்களாட, நாகரீகமான வீரகண்டா மணி நடனமிடு மயிலுமாட, பாலகர்கள் காவடிகள் கொண்டு புகழ்ந்தாடப் பக்தர்கள் நடனமாட பாங்கான காவினீறுடை யாட சித்தர்கள் பணிந்து நிர்த்தனங்களாட, ஆலத்தை யுண்டவன் புத்திரனே சமர்புரி ஐயனார்வருக, வருக ஆறு முகமான திருநீறு வொளியான வருளாறு முகமான குருவே. 5

ஓம்

# சண்முகக்கடவுள் பஞ்சரத்தினம்

ஆறுமுகன்காண் பன்னிரு கண்ணன்காண் அழகு வேலுடையவன் காண், வேலுமயில் வாகனன் காண்யெளியவர் துயர்தீர்ப் பவன் காண் யென்னிருகண் மணியன் காண் சாறுமடியர் வினை தீர்ப்பவன் காண், பேறு பெரும் போரூர் புண்ணியன் காண் யெம்மான் காண் யெந்நாளு மென்மன முள்ளானே.

1

விண்ணவர் துயர் தீர்த்தவன் காண் வேதியனைச் சிறையில் வைத்தவன் காண், பண்ணினாற் பாடுபவர் பல மொழிப்பவன் காண், பக்தருளத்தித்திக்கும் செங்கனிகாண், பெண்ணொருத்தி யபயமென வந்தவன் காண் பேயோடாடு பவர் புதல்வன் காண், மண்ணாடர் தொழுதேற்றும் போரூர் மன்னவன் காண் என்னாளு மென்மன முள்ளானே.

2

கன்னிகளிருவரை மணந்தவன் காண்கானகத்தில் வேங்கைமர மானவன்காண், தன்னிகரிலாத தயாபரன்காண் தந்தைக்கொரு மொழியுரைத்தவன்காண், சென்னிமலை வேலவன் காண், செங்கதிரர்வேல்பிடித்த செல்வன் காண், இன்னாடர்தொழுதேத்தும் போரர் யீசனிவன்காணென் னாளு மென் மனமுள்ளானே. 3

செந்யம்பதி வாழும் செங்கல்வராயன் காண் செங்கண் மால் மருகன் வந்துபணிவோர்க் கருள் தருபவன் காண் வானவர்கோமான்காண், பந்தப்பிறவி யறுப்பவன்காண் பாவர்க்குகந்த பரமன்காண் கந்த மணக்கும் போரூரர் கற்பகங் காண் என்னாளு மென்மனமுள்ளானே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சக நெஞ்சரை வதைப்பவன் காண் வாதாடுஞ் சூரரை வென்றவன்காண், தஞ்சமென்பாரிடர் தீர்ப்பவன் காண், தானவர்சிறை மீட்டவன் காண், நஞ்சுண்டகண்டர்க்கு நாயகன்காண், நற்கீரர் பாடலுக்கு நயன்றவன்காண், சஞ்சலந் தீர்க்கும் போரூர் சரவணன் காண் என்னாளுமென் மனமுள்ளானே.

5

ஓம்

# காமாட்சியம்மன் விருத்தம்

## காப்பு

மங்களஞ்சேர் கச்சிநகர் மன்னுகா மாட்சிமிசைத்
துங்கமுள நற்பதிகஞ் சொல்லவே - திங்கட்
புயமருவும் பணியணியும் பரமனுளந்தனின்மகிழுங்
கயமுகவைங் கரனிருதாள் காப்பு.

## ஆசிரிய விருத்தம்

1 சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி சோதியாய் நின்றவுமையே, சுக்கிரவாரத்திலுனை கண்டு தரிசித்தவர்கள் துன்பத்தை நீக்கி விடுவாய், சிந்தைதனிலுன் பாதந்தன் னையே தொழுபவர்கள் துயரத்தை மாற்றிவிடுவாய், ஜெகமெலா முன் மாய்கை புகழவெண்ணாலாமோ சிறியனால் முடிந்திடாது. சொந்தவுன் மைந்தனாய்யெந்தனை யிரட்சிக்கச் சிரியகடனுன்ன தம்மா, சிவசிவ மகேஸ்வரி மரமனிட யீஸ்வரிசிரோன்மணி மனோன் மணியுநீ, அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரியனாத ரட்சகியும் நீயே அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடுமம்மை காமாட்சி யுமையே.

2 பத்து விரல் மோதிரம் எத்தனை பிரகாசமது பாடகந் தண்டை கொலுசும், வைடூரிய மிச்சையாயிழைத் திட்ட பாதச்சிலம்பினொலியும், முத்து மூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும் மோகனமாலையழகும், முழுதும் வைடூரியம் புஷ்பராகத்தினால் முடிந்திட்ட தாலியழகும், சுத்தமா யிருக்கின்ற காதினிற் கம்மலுஞ்செங்கையிற் பொன்கங் கணம் ஜெகமெலாம் விலைபெற்ற முகமெலாமொளிவுற்ற சிறுகாது கொப்பினழகும், அத்திவரதன் தங்கை, சத்திசிவ ரூபத்தை யடியனாற் சொல்ல திறமோ அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சி யுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 கெதியாக வுந்தனைக் கொண்டாடி உனதுமுன் குறைகளைச் சொல்லி நின்றும், கொடுமையாயென்மீதில் வறுமையை வைத்து நீ குழப்பமாயிருப்பதேனோ, சதிகாரி யென்று நானறியமாலுந் தன்னைச் சதமாக நம்பினேனே, சற்றாகிலும் மனது வைத்தென்ன ரட்சிக்க சாதக முனக்கில்லையோ மதிபோல வொளியுற்ற புகழ்நெடுங்கர முடைய மத்தகஜனையீன்றதாயே, மாயனிட தங்கையே பரமனது மங்கையே மயானத்தில் நின்றவுமையை அதிகாரி யென்று நானாசையாய் நம்பினே னன்புவைத் தென்னை யாள்வாய், அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே.

4 பூமியிற் பிள்ளையாய்ப் பிறந்தும் வளர்ந்தும் நான் பேரான ஸ்தலமுமறியேன் பெரியோர்கள் தரிசன மொருநாளும் கண்டு போற்றிக் கொண்டாடியறியேன், வாழியென்றுன்னைச் சிவகாமியென்றே சொல்லி வாயினாற் பாடியறியேன், மாதா பிதாவினது பாதத்தை நானுமே வணங்கியொரு நாளுமறியேன், சாமியென்றே யெண்ணி சதிருடன் கைகூப்பிசரணங்கள் செய்துமறியேன், சற்குருவின் பாதார விந்தங்களைக் கண்டு சாஷ்டாங்க தெண்டனிட்டறியேன், ஆமிந்த பூமியினடியனைப் போல் மூடன் ஆட்சி நீ கண்டதுண்டோ, அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சி யுமையே.

5 பெற்ற தாயென்றுன்னை மெத்தவும் நம்பினான் பிரியமாயிருந்தனம்மா, பித்தலாட்டக்காரியென்று நானறி யாது உன் புருஷனை மறந்தனம்மா, பத்தனாயிருந்து முன் சித்தமுமிரங்காமல் பாராமுகம் பார்த்திருந்தால், பாலன் யானெப்படி விசனமில்லாமலே பாங்குடனிருப்பதம்மா, இத்தனை மோசங்களாகாது ஆகாது இது தர்மமல்லவம்மா, எந்தனை ரட்ஷிக்க சிந்தனைக ளில்லையோ யிதுநீதியல் லவம்மா, அத்திமுகனாசையா லிப்புத்திரனை மறந்தையோ அதை யெனக்கருள் புரிகுவாய் அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியே யுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 மாயவன் தங்கை நீ மரகதவல்லி நீ மணிமந்த்ர காரிநீயே, மாயாசொரூபி நீ மகேஸ்வரியுமான நீ மலையரையன் மகளான நீ, தாயே மீனாட்சி நீ சற்குணவல்லி நீ தயாநிதி விசாலாட்சி நீ, தரணியில் பெயர்பெற்ற பெரிய நாயகியும் நீ, சரவணனையீன்றவளும் நீ, பேய்களுடனாடி நீ அத்தனிட பாகமதில் பேர்பெற்று வளர்ந்தவளும் நீ, பிரணவசொரூபி நீ பிரசன்ன வல்லிநீ பிரியவுண்ணா முலையு நீ, ஆயிமகமாயிநீ ஆனந்தவல்லி நீ அகிலாண்ட வல்லி நீயே, அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடுமம்மை காமாட்சி யுமையே.

7 பொல்லாத பிள்ளையாயிருந்தாலும் பெற்றதாய் புத்திகளைச் சொல்லவில்லையோ, பேய் பிள்ளையானாலும் தான் பெற்ற பிள்ளையைப் பிரியமாய் வளர்க்கவில்லையோ, கல்லாகிலும் மூச்சு நில்லாமல் வாய்விட்டு கதறிநானழுத குரல், கரடுதனிலெட்டிலொரு கூறுவது வாகிலுன் காதினின் நுழைந்த தில்லையோ, இல்லாத வன்மங்க ளென்மீதிலேனம்மா யினிவிடுவதில்லை சும்மா இருவரும் மடிபிடித்துத் தெருதனில் வீழ்வதுமிதுதருமமல்ல வம்மா, எல்லாருமுன்னையே சொல்லியே யேசுவாரது நீதி யல்லவம்மா, அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடுமம்மை காமாட்சியுமையே.

8 முன்னையோ சென்மத்தில் மென்னென்ன பாவங்கள் முடனான் செய்தனம்மா, மெய்யன்று பொய் சொல்லி கைதனிற்பொருள் தட்டி மோசங்கள் பண்ணினேனோ, என்னமோ தெரியாது இலட்சணந்தன்னிலே யிக்கட்டு வந்ததம்மா, ஏழை நான் செய்த பிழை தாய்பொறுத் தருள் தந்து என் கவலை தீரமம்மா, சின்னங்களாகுது ஜெயமில்லையோ தாயே சிறுநாண மாகுதம்மா, சிந்தனைளென்மீதில் வைத்து நற்பாக்கிய மருள் சிவசக்தி காமாட்சி நீ, அன்னவாகன மேறியானந்தமாக வுன்னடிமையின் முன் வந்து நிற்பாய், அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 எந்தனைப் போலவே சென்ம மெடுத்தோர்களின் பமாய் வாழ்ந்திருக்க, யான் செய்தபாவமா வித்தனை வறுமையி லுன்னடியேன் தவிப்பதம்மா உன்னையே துணையென் உறுதியாய் நம்பினேனுன் பாதஞ் சாட்சியாக, உன்னையன்றி வேறு துணையினியாரையுங் காணேன் உலகந்தனிலெந் தனுக்கு, பின்னையென்றெண்ணி நீ சொல்லற மெச்சவே பாலன் மார்க்கண்டன் போல், பிரியமாய்க்காத்தி டம்மா, அன்னையே யின்னமுன் னடியேனை ரட்சிக்க அலைவுசெய் யாதேயம்மா, அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே.

10 பாரதனி லுள்ளளவும் பாக்கியத்தோடென்னைப் பாங்குடனிரட்சிக்கவும், பக்தியாயுன் பாதம் நித்தந்தரிசித்த பாலருக்கருள் புரியவும், சீர் பெற்ற தேகத்தில் சிறு பிணிகள் வாராமல் செங்கலிய னணுகாமலும், சேயனிட பாக்கியஞ் செல்வங்களைத் தந்து ஜெயம்பெற்று வாழ்ந்து வரவும், பேர் பெற்ற காலனைப் பின்தொடரவொட்டாமற் பிரியமாய்க் காத்திடம்மா. பிரியமாயுன் மீதல் சிறியனான் சொன்னகவி பிழைகளைப் பொறுத்துரட்சி, ஆறுதனில் மணல்குவித்தரிய பூசை செய்தவென் னம்மை யோகாம்பரி நீயே, அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சிவுமையே.

11 எத்தனை ஜெனனம் மெடுத்தேனோ தெரியாது விப்புமி தன்னிலம்மா, இனியாகிலும் கிருபை வைத்தென்னை ரட்சியு மினி ஜெனனமெடுத்திடாமல் முத்திதரவேணு மென்றுன்னையே தொழுது நான் முக்காலும் நம்பினேனே, முன்பின்னுந் தோணாதமனிதரைப்போல நீ முழித்திருக்கா தேயம்மா, வெற்றிபெற வுன்மீதில் பக்தியாய் நான் சொன்னவிருத்தங்கள் பதினொன்றையும் விருப்பமாய்க் கேட்டு நீ யளித்திடுஞ் செல்வத்தை விமலனாரேசப் போறார், அத்தனிட பாகமதைவிட்டு வந்தே யென்ன ருங் குறையைத் தீருமம்மா, அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடுமம்மை காமாட்சி யுமையே.

காமாட்சியம்மன் விருத்தம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வடிவுடையம்மன்

## ஆசிரியவிருத்தம்

1 சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி சோதியாய் நின்ற வுமையே, சுக்கிரவாரப் பெருமையுங்கண்டு னதுசேவையுஞ் சொல்லவும் எளிதாகுமோ, சங்கநிதியாகிய செந்தமிழ்ப் புராணியென், சலிப்பெலா மாற்றியருள்வாய்ச், சற்குணி மெற்குணி நிற்குணி சதுர்வேத சமயமும் மாரிநீயே, சிந்தை மிக நொந்துயான் வந்த குறையுந்தன் முன் செப்பவுங் கேட்கவில்லையோ, ஜெகமெலாம் பெற்ற தாயே தந்திர முகுந்தனிட தங்கைசிவமங்கையே தரணிபுக ழொற்றியூர் வாழ், தங்கமலர் நாதர் சடை கங்கையுரு வானகொடி திங்களொளிவான வடிவே.

2 மண்டலந் தன்னிலே கண்கண்ட தெய்வம் நீ மற்றுமொரு தெய்வமுண்டோ, மந்திரபேய்களுந் தந்திர சூனியமும் மற்றுஞ்சத்ராதிபகையும் கண்டுனது பாத மலர் நின்றுதுதி செய்திடக் கலங்கிப் பறந்தோடுமே, கன்மமும் பிணிகளும் வன்மமில்லாமலே கண்டவுடன்தெண்டனிடுமே, இன்று முதலாய் வந்த பண்டுபழி பாவமும் இனிமேல் வரும் வினைகளும், எந்தன்மேல் கணக்காகச் சிந்தையில் நினைக்காம லியமனணு காமலருள்வாய்த், தண்டுளப மாலையணி மார்பனிட தங்கையே தரணிபுகழொற்றி யூர்வாழ், தங்கமலர் நாதர் சடை கங்கையுருவான கொடி திங்களொளிவான வடிவே.

3 பாரெலாந் துதிபெற்ற பாதவிரல் மோதிரம் பாடகந் தண்டை கொலுசும், பதித்த யிடைமீதினிலணிந்த பட்டாடையும் பசும் பொன்னினொட்டியாணமும், வாரணியு மார்பினில்சரப்பளி பதக்கமம் வச்ரமணி தாலியழகும், வையகந் துதிபெற்ற கையினிற் கடகமும் வர்ணநிறமான கிளியும், சீறொழுகு காதினீற்கம்மலுந் தொடுகாப்பும், ஜெகமெலாம் நிறைந்தவுருவம், சித்திர வொளி பார்வையும் ரத்தின மூக்குத்தியுஞ் செண்பக முடித்த குழையும், தாரணிதனிலுன்பெருமை சாற்றவெளி தாகுமோ தரணிபுக ழொற்றி யூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கையுருவான கொடிதிங்களொளிவான வடிவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 தாயது வயிற்றிலே மாயமாய்த் திரித்து நான் தங்கினே னங்குசிலநாள், தாரணியில் வீழ்ந்தபின் புழுதியில் புரண்டுந் தவழ்ந்தபடி நடந்தது சிலநாள், காயமும் வளர்ந்திந்தப் பாரினில் உழன்று மிகக் காளையாய்த் திரிந்தது சிலநாள் காணாமல் வதங்கியேவூமைப் போல் மயங்கிக்கருத்தது அழிந்தது சில நாள், மங்கையாலே லோக வாழ்க்கைதனை மெய்யென்று மயங்குதென் மனதிலம்மா, மாறாத பிறவியது யாரா லெடுக்கத்தர மைந்தன் சுமக்க வசமோ, தாயென்று வுன்னை நானம்பினே னருள்புரிவாய் தரணிபுகழொற்றியூர் வாழ் தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வான கொடி திங்களொளிவான வடிவே.

5 நற்செயலிலாதவுட லிச்சைபாடான சுகம் நற்குணமி லாதகுறைகள், நான்முகனெனும் பாதகன் செய்த கபடமோ சபலையினைப் போலவே தயங்கி மிகவே யிளைத்தேன், தாயே யுன்னாதரவு ஏழைநான் செய்த பிழை தாயலாதார் பொறுப்பார் அர்ச்சனைகள் செய்து தொழுமிச்சை யடியாரினு மாதரத்தொடு புறப்பாய் அன்னையுனையல்லாது பின்னைவே றில்லையே யனாதரட்சகி யல்லவோ தற்சொருப மாயிலகு மச்சுதன் தங்கையே தரணிபுக ழொற்றியூர் வாழ் தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வானகொடி திங்களொளி வான வடிவே.

6 நில்லாத சமுசார மாய்கையெனை வந்து தான் நித்தமும் வாதிக்குதே, நெஞ்சமது பஞ்சுபோல் அஞ்சுதே சஞ்சலம் நினைவிலே பெரிதாகுதோ நல்லாரை யெண்ணாமல் பொல்லாதசினத்தினால் நடுங்கிடப் பேசவருதே, நாவினாலுன் புகழையே தியானிக்க வொட்டாமல் தன்னினை வைமாற்றி விடுதே, கல்லாப் புல்லரிடம் வல்லாண்மை பேசியே காலனுக்குள்ளாக்குதே, கள்ளமன தானவிதை நல்லமனதாகிட கருணாகடாட்ஷம் வைத்து, கள்ளியென் வறுமைபிணி நல்லசெல்வங்களருள் தரணி புகழொற்றியூர் வாழ், தங்கமலர் நாதர் சடைகங்கையுருவான கொடி திங்களொளி வானவடிவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 பெற்ற தாய் தந்தையும் பிறவியு மிருந்தென்ன பிள்ளை பெண்சாதி யென்றும் பிரியமாய்மனிதர்க்கு ஞறவாயிருந் தென்ன பிராணனுக்குதவியுண்டோ, நித்தனாரிடமாகமுத்தி தர வேயொளிரரு நீலியம்பிகை திரிசூலி, நீங்கவொட்டாமலே தேங்குமுளமல நீக்கி நிலையான பதிவியருள்வாய் மெத்தவே நொந்துனது சிற்றடியை நம்பினேன் மிகமவுனமாயிராதே, மெய்யான தெய்வமுண்டோ, தத்திமித் தாளமொடு மருமலர் தியாகர்மகிழ்தரணிபுக ழொற்றியூர்வாழ் தங்கமலர் நாதர் சடை கங்கையுருவான கொடி திங்களொளிவானவடிவே.

8 ஓயாத கவலையுந் தீராத வறுமையு மொழியாத வன்பிணிகளும், வுலகெலாம் பகைகளும் அளவிலா கள்ளமும் ஒருவாற் சொல்ல வசமோ, பேயாக நானிந்தப் பீடையிற்சிக்கியேபிதற்றவும் பூமிதனிலே, பெண்களெனு மாய்கையாலங்கமது வாடியே பிரமையால் மெய்தளர்ந்தேன், தாயென்று மலறியழ யேனென்று கேட்கிலாய்த்தருமமமா, வுந்தனுக்குத் தஞ்சமென்றுன் பாதம் நெஞ்சினில் நினைத்தோர்கள் தளர்வரோ தரணி தனிலே, தாயேயிது தர்மமோ மாயனது தங்கையே தரணிபுகழொற்றி யூர்வாழ் தங்கமலர்நாதர்சடை கங்கையுரு வான கொடி திங்களொளி வான வடிவே.

9 எத்தனை துயரமென்றியம்புவே னம்மமா எளியேன் செய் கொடுமையேதோ, இக்காயமுஞ் செல்வமும் நிலை யென்று நம்பியேயிப்படியெலாந் தளர்ந்தேன் பெற்றதாய் நீயென்று முறையிட்டு வலறிடப் பேசாதிருப்பதேனோ, பேச்சியென்றேற்குதலில் தாட்சியே வம்மணி பிள்ளைமேற் கோபமேதோ, அத்திமுகனைப் பெற்ற நித்ய கல்யாணியே அமரர் தொழும் சர்வாணியே, அறியாத சிறுவன் மேலினியாகி லுளமகிழ்ந்தன் புவைத் தருள்புரிகுவாய் தத்வமயில் வாகனனைப் பெற்றகௌமாரியே தரணிபுக ழொற்றியூர்வாழ் தங்கமலர்நாதர் சடைகங்கையுரு வான கொடி திங்களொளிவான வடிவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 படிக்கவறியே னுனைத்துதிக்கவறியே னென்ன பாதகத்தின் கொடுமையோ, பாட்டு மறியேன் கவிதைக் கேட்டுமறியேன், மிக்க பாவலர்கள் நேசமறியேன், நடுங்கிடக் குருவடிவணங்கியறியேன் சடிலநாதனடி பூசையறியேன், நான் மனிதனுருவாகிப் பூமியிற் சன்மித்து நலமான செல்வமறியேன், கடல்சூழு மிவ்வுலகில் என்போலு மூடனைக்கண்டதுண்டோ வருளுவாய்க் காமாட்சியுந்த னிடபாத மேநம்பினேன் கன்மவினை யணுகாமலே, தடுத்தடிமை கொண்டெனைக் கடைத்தேற வேயருளித் தரரணிபுகழொற்றியூர் வாழ், தங்கமலர்நாதர், சடை கங்கையுருவான கொடிதிங்களொளி வான வடிவே.

11 மண்ணினி லிருக்களவு மின்றுமுதலாகவும் மனு வொன்று கெட்பதறியேன், மாறாத செல்வமுந் தேறாதகல்வியு மனு நீதி ஞானவழியுங் கண்ணிலிரு நாடாமல் காய மிகவாடாமல் கைகால் ணோகாமலே காலனுக் கஞ்சாமல் கலியனு மிஞ்சாமல் கடுஞ்சினம் வாராமலே, பண்ணவே தருமமும் யினியவுபகார மும் பசித்தபேர்க் கமுதுதாவும், பாருலகி லுந்தனிடபாதத்தை நம்பினேன் பட்சம்வைத்திரட்ச்சியம்மா, தண்ணிதழ் மாலையணி தற்பரர்க் கமுதமே தரணிபுக ழொற்றியூர் வாழ் தங்கமலர் நாதர் சடை கங்கையுரு வானகொடி திங்களொளி வானவடிவே.

வடிவுடையம்மன் விருத்தம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மதுரை
# மீனாட்சியம்மன் பதிகம்

## காப்பு

மாமதுரை மீனாட்சி மாதேவிமீது தமிழ்ப்
பாமதுரமாலைசொலப் பாங்கருளும்...ஆமதுகை
பத்தியுரித்தந்தியுரித் தத்திதிரித்தானுதவுஞ்
சித்தியுலாவின் சேவடி.

## சங்கப் புலவர் துதி

சதுர்பரவுஞ்செல்வத்தை மிகுமாடஞ்சூழ்
மதுரையங்கயற்கண்மாதேவி - துதிமாலை
துங்கத்த மிழாற்றுதிக்கச் சுவைதருமுச்
சங்கத்தவர் தங்கத்தாள்

## ஆசிரிய விருத்தம்

1 சகம்பரி சௌந்தரி கதம்பரி சுதந்தரி துரந்தரி நிரந்த ரியெலாந், புதாங்கிய புராதனி பாராபரை சராசர சமூகதரங்க ணாங்கி, நலந்தரு குருந்தென வருந்தரும் வடிவாம்பிகை பொன்னளினகுஜ கும்பேஸ்வரி, நாராணிகுணதீத பூரண கிருபாகரி நயங்கொள்வைதிக காருணி, திகம்பரி சிலம்பொலி முழங்கி நடம்புரி சிவாநந்த பரமஞான, சிற்சொரூ பகிரண சரணாம்புயத்துணையுதவி செய்தென்னை யாளன்னையே, மகம்பரி மல்லேனி குலதிலகவேங்கடசாமி மனமகிழு, மதிமௌலிவர மாட்சிமணி மகுடவரசாட்சி மதுரை மீனாட்சியுமையே.

2 மழைமுகங்காணாத பயிராயி னேனிரவி மதியிலா மலராயினேன், வளமற்ற நிலமாயினேன், புனல் வறண்ட தடமாயினேன் ஜடனாயினேன் குழையுளமிலாதகுண னாயினேன் பாவபணிகொண்டாடிப்பேயாயினேன், கோபதாபத் தினாற் றீவினைக் குள்ளாய்க் குமுங்கினேன் பேராசையாற் றழையிலாத்தாயிலாச் சேயாய்த் தளத்து மனை மக்கள் சுற்றந் தந்தைதாய் சந்தைசதமன்றென்றுணர்ந்துனைச் சரணடைந்தேன். கருணை கூர் மழையென்ன மாழை பொழிவள்ளல் வேங்கடசாமி மனமகிழுமதிகுலாட்சி, மதிமௌலி வரமாட்சி மணிமகுட வரசாட்சி மதுரை மீனாட்சி யுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 தந்தைமன முஞ்சலித் தன்னையின முஞ்சலித் தயனுங் கரஞ்சலித்தான், தாங்கு புவியமுஞ்சலித்தோங்கு முடி யாக்கைநோய் தாமுஞ் சலித்தவாணாள் நந்தலில்லான் மாசலித்த தயனந் திங்கணாடெய்தி கோள்சலித்த, நாமஞ் சலித்தருசி பாகஞ் சலித்தகுரு நாதமனமுஞ் சலித்தது பந்த வினமுற்றார் சலித்தந்தகன் பாசப்பாழ் நரகமுஞ் சலித்த பாவியே நீயுஞ் சலித்தெனை, விடாதிருபதாம் புயந்தந்தருள் செவ்வாய் வந்தனை செய்யும் பாசமுத்திர வேங்கடசாமி மனமகிழுமதிகு லாட்சி, மதிமௌலி வரமாட்சி மணிமகுட வரசாட்சி மதுரை மீனாட்சியுமையே.

4 வையகத்திலுள்ள பலயோனியே பேதத்திலினி யான் மாதவக்குறையின் மூத்தோன், மாதவர்க்கிடையூறு போதவிளைவித்த யுன் மார்க்கத் துயர்ந்த மூத்தோன், செய்யத் தகாத நெறி பொய்சூது சத்தியஞ்செய்வ தடியார்க்குண்ட மூத்தோன், ஐயத்தினியெனத் தெய்வதுணை பேசுவாகாணவத்தின் மூத்தோன், அநியாய சோரசாரத்தின் மூத்திடுமென்னையாதரித்திடவருதியோ, வையகத்தின் மநுவாதி மெய்யன் வேங்கடசாமி மனமகிழுமது குலாட்சி மதிமௌலி வரமாட்சி மணிமகுடவர சாட்சி மதுரை மீனாட்சி யுமையே.

5 அம்மம்மாவேத நான்காதி தாயென்றுனையழைத்திட்ட பெயரும் பொய்மையோ, அன்ன பூரணியென்ன மன்னுபெயர் பொய்மையோ, அறம் வளர்த்தது பொய்மையோ, விம்முதன மேனை வரை ராஜபுத்திரியென விளங்கிய வளம் பொய்மை யோ வீறுபாண்டிய குலதடாதகையெனப் புகழ்விரித்த விஜயம் பொய்மையோ, செம்மலஞ் சோமசுந்தர பாண்டியற்குரிய தேவியானது பொய்மையோ, சேருக்கிர பாண்டியச் செயப்பேறு பொய்மையோ, தீனர்க்குனருள் பொய்மையோ மைமுகினிகர்த்த கொடைவள்ளல் வேங்கடசாமி மனமகிழு மதிகுலாட்சி, மதிமௌலி வரமாட்சி மணிமகுடவர சாட்சி மதுரை மீனாட்சி யுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 மகாராஜன்மகள் நீ மகாதேவன் மனைவி நீ மகாராஜேஸ்வரி நீ கஞ்சமால் தங்கை நீ விஞ்சுவார்கங்கை நீ கொஞ்சுமஞ்சு மங்கை பூமனாருன் மருகனோ வெனும் பிரணவப் போதநாதர்க்குரைத்த, பூங்கடம் பொற் கடற் புயகடம்பன் கடம் பொழி செவிக் கேட்டு வதனன் மாமகார் பொன் வெள்ளி மலைபதியின், துலவுகிடமதி கதிருடனே வலர்களால், வாய்ந்த நின்மகிமை சொலவல்லனோ, நிபுர வடிக்குரியனானல்லனோ வாமசிவ கங்கை கண்ட டாக்டர் வேங்கடசாமி மனமகிழுமதிகுலாட்சி மதி மௌலி வரமாட்சி மணிமகுட வரசாட்சி மதுரை மீனாட்சி யுமையே.

7 ஏழைக்கிரங்கி னாலறமறையுமோ பிறந்தேறிய குலங்குறையுமோ என்மனோர் விம்மியம் மாவுனை வெறுப்பரோ விநயம் வைத்தால் வைவரோ, தாழைக்குனன் பனிடு சாபந் தவிர்ந்துச்சி நனினச்சி மெச்ச விலையோ, தமிழ்க்கிச்சை யாற் புலவனுக்குன்னணிக் குழையணிற்றிங்கள் காட்ட விலையோ, மாழைக்குள்ளொளியென்ன வையத்தினேழை பருவமில்லா விடிலுமன்னை நின்மைந்தனை வெறுத் தலறவோ, வாழைக்குலங்கடழை, கூடல் வேங்கடசாமி மனமகிழும் மதிகுலாட்சி மதிமௌலி வரமாட்சி மணிமகுட வரசாட்சி மதுரரை மீனாட்சி யுமையே.

8 தந்தைநீ தாயுநீ குருவுநீ தெய்வநீ ஜகமுநீ சட்சமயநீ, தனமுநீ மனமுநீ யனமுநீ கனமுநீ சனமுநீ யினமுநீயே விந்தைநீ முந்தைநீ வேதநீ நாதநீ வேதாந்தநீ சாந்தநீ, வெளியுநீ, யொளியூநீ யளியநீ யைம்பூதநீ வேடநீ மேலாநீ சிந்தைநீ, சர்வசரஜீவநீ தேவநீ சித்திநீ முத்திநீ மாதேவிநீ யுன்பாத சேவையு மெய்யடியார் திருவடி பொடியடியனேன் வந்தனை செயழகரிச்சாமி வேங்கடசாமி மனமகிழு மதிகுலாட்சி, மதிமௌலி வரமாட்சி, மணிமகுட வரசாட்சி மதுரை மீனாட்சியுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 நின்பாத சேவையை நினைத்த பேர்தென்பா லென்பா னெருக்கமடையார், நின்னுருவினைக் காணவெண்ணி னோரன்ன வயனேழு துங்கணக்கினமையார் முன்பான சந்நிதி புகுந்த பேர் மிடியென்னு முருடன் றிதிக்குபடா, முதிய பொற்றாமரை பிடித்த பேர்பிறவியொடு மோக மரணத் துயர்புகார், சன்மான வெகுமானதான மோனத்தி யானதப ஞான மிகு நிதானந், தாயே நினைத்தின் மனத்துட் பதித்தவர் தமக்கரியதோ பெரியதோ, மன்பூவை மென்பூவை மன்னும் வேங்கடசாமி மனமகிழுமதிகுலாட்சி மதிமௌலி வரமாட்சி மணிமகுட வரசாட்சி மதுரை மீனாட்சி யுமையே.

10 நாடாது நாடியோடித் திரிந்துழலா மனாவினுரை பொய்த் திடாமல் நல்குரவு பண்ணாமல் கட்புலனொடுங்காம னற்செவியடைத்திடாமல், தேடாத கன்மவுடன் வாடாமல் கூனரை திரைந்துமதி சோர்ந்திடாமல் திடந்தப்பிடாமல் வெண்பற்களு திராமற்செழுங்கலை குறைந்திடாமல் ஆடாத பம்பரம்போ லோய்ந்து பந்தபாசக் கடலில் மூழ்ந்திடாமல் அன்னையே நின்னையே யுன்னினேன் பன்னினே னாத ரித்தருளென்னையே, வாடாத செங்கமல மார்பன் வேங்கடசாமி மனமகிழு மதிகுலாட்சி, மதிமௌலி வரமாட்சி மணிமகுட வரசாட்சி மதுரை மீனாட்சி யுமையே.

11 மீனலோசனி யுசிதமிர் துவசனி சிவதனிவிச புதசேவித புராணி, விளையாட லறுபத்துநான்கு புரிசோமசுந்தர ராங்கமாம் பவானி, தானதருமந்தேவதான சிவகங்கா சமஸ் தானசர்வபூமன் தங்குங்கீரிடபதி ராஜதுரைச்சிங்க தேவர்க்கு வந்ததாமன், வானவர்மதிக்கு நல்லம்பால்சமுத்திர புரவாகன் அழகிரிசாமிபால், வந்தனையினாற் றந்த மைந்தப் மூவர்க்குண் மல்லேனி வேங்கடசாமி வேள்மான நவரத்ன மணிமாலையணிவான் மனமகிழ்ச்சி பெற ரட்சை புரிவாய், மாதங்காபுரச் சண்முகன் றுதியுனது வனசமலரடி புனைந்தேன் மணிமகுட வரசாட்சி மதுரை மீனாட்சி யுமையே.

**மதுரை மீனாட்சியம்மன் பதிகம் முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# துரோபதையம்மன் விருத்தம்

சீர்பெற்ற வுலகினில் துவாபரயுகத்தினில்

ஜென்மித்து ஐவராக

செங்கோலுக்கதிபதி தர்மபுத்திரபீமர்

தனஞ்செய னகுலசகாதேவர்

பேர்பெற்ற திரிதராட்டிரன் மைந்தன் துரியனுடன்

சூதாடிபுவி தோர்த்துதன்

தேவிபாஞ்சாலியும் ஐவரும் வனவாசம்

சென்றுதான் பன்னிரண்டு

நேர்பெற்ற அக்யாதம் ஓராண்டு செல்லவே

நின்றுதான் விராடபுரத்தில்

நெடியமால் தயவினால் பாரத முடிக்கவே

நிகரிலாப் போர்பொருந்தி

மார்த்ததுரியன் மேல் நின்றுதான் விரிகூந்நல்

வாரியே முடித்தவுமையே

வர்னக்கிளிகதம்பமணி குங்கும வசந்தநெறி

மதிரூப பாஞ்சாலியே 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடாளும் பாஞ்சாலன் எக்கியந்தன்னிலே
நீயொரு பெண்பிறந்தாய்
நெடிதொருவில்தனை வளைத்தவர் தமக்கு நீ
நிச்சயந்தருவனென்றார்.
சோடாக சுயம்வரஞ் சாட்டிய துருபதன்
துரோபதை தனக்குமணமே
சொல்லரிய துரியோதிர ராஜனுந்தம்பிமார்
தொல்புவி மன்னவர்களும்
ஆடாதவில் தனை நாணேற் றிடாமலே
அவமதிப்பட்டுநிற்க
அப்போதுவனவாசம் காட்டினில் திரிந்தவர்க
ளனைவருந் தானிருக்க
வாடாத வில்தனை வளைத்து தானர்ச்சுனன்
மாலைதானிட்டுக் கொண்டார்
வர்னக்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே 2

தர்மமோநித்தியம் தர்மமோ முக்தியும்
தர்மருங் கொலுவிருக்க
தாஷ்டீகவீமனும் அர்ச்சுனனும் நகுல
சகாதேவ னருகிருக்க
வரமுள்ளதேவியுனை ஐவர்க்கும் பாரியாய்
மாதுநீ அருகிருக்க
மாதுநீ யொருவர்க்கும் பாரியுமல்லகாண்
மற்பொருது பார்க்கவந்தாய்
சாருத்த போரினில் ஐவரையுங் கொண்டு வந்து
சபதமே முடித்தவுமையே
சங்கரிசார்வாலை வந்தனிட மகிமையான்
சாற்றவே முடியுமோதான்
வர்மகுண வஞ்சியேமாயோன் சகோதரி
வந்தென்னை ரட்சித்திடும்
வர்னக்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சவரை துரியனும் விருத்துக்கு வாவென்று
பரிவாகவே யழைத்து
பாதகன் சகுனியும் வசனாபியைக் கலந்து
பரிந்துடன முதளித்தான்
வஞ்சனையறிந்துதான் மாயவர் கிருஷ்ணரும்
வண்டாய்ப் பறந்து வந்து
மணிரத்னதீபத்தை யணைக்கவே பஞ்சவர்கள்
மனம்வாடி திகைத்து நின்றார்
நெஞ்சினில் கபடமது யில்லாதபீமனும்
படுகறையாய் மூர்ச்சையானார்
வஞ்சியே துளபமணி மாலையர்வயித்தியராய்
வந்துபீமருக் குயிரளித்தார்
வர்னக்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிருப பாஞ்சாலியே. 4

ஐவரையுங் கொண்டுபோயரக்கு மாளிகையினி
லடைத்தான் துரியோதிரன்
அக்கண்ட விலங்கிட்டு அக்கினியை மூட்டினான்
அப்போது தர்மர்தானும்
செய்யும்வகையே தென்று தேவரீர்மாயவரை
சிந்தையில் நினைத்தபோது
செந்துளப மாயனார் வந்துதானைவரையும்
தற்காத்து ரட்சித்தார்
தையலாள் துரோபதை சபையிலேகொண்டுவர
தம்பி துற்சாதனன்தான்
சற்றுந்தயவில்லாமல் பத்தினிதுகில்தனை
கைப்பற்றியே யுரிந்தார்
வையமளந்தவரை மனதில் நினைத்திட
மாளாது துகிலளித்தார்
வர்னக்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிருப பாஞ்சாலியே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண் டாண்டுதான் சென்றுமே வனவாசம்
பருகியே அக்யாதந்தான்
பாராளும் விராடனார் பக்கலில் ஐவரும்
பத்தினி மாறுவேடமாய்
தனியாகமயல்கொள கீசகன் தனைக்கொல்ல
தஷ்டீகபீ மன்றானும்
தாக்கிய அர்ச்சுனன் சண்டைக்குமாடுபிடி
சாரதி மாயன்றானும்
பனிசூழும் பாராளும் துரியனார்பக்கலில்
பாலகனைத் தூதனுப்ப
பாதி நாடாளவே ஐந்தூருங்கேளுமென
பகரவே மாயனார்க்கு
வாணி சூழத்தினா புரந்தனிலேகியே
மாயவர் தூது சென்றார்
வர்னக்கிளி கதம்பமணி குங்கம வசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 6

பாரதம் பதினெட்டு நாளுமே சென்றபின்
பரிவான தருமருக்கு
பட்டாபிஷேக மேகட்டியே மகுடமுடி
பண்பாகவே சூட்டியே
சாரதியானதொரு மாயவர் வந்துதான்
சதுர்மறைகள் தானோதியே
சாத்தியே யரசாளும் செங்கோல் செலுத்தியே
தர்மராஜ னென்று போற்ற
வீரவாளுருவியே தம்பிமார் நால்வரும்
வீரியமாக நிற்க
வீரதம்பட்டமும் முரசுவல் லாரையும்
விருதுடனார்ப் பரிக்க
வன்னியே துரோபதா தாள்பூண்டு பூதேவியும்
வந்துதா னருகிருக்க
வர்னக்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலமது ஆண்டபின் கலிபிறந்ததென்று
ஒன்றாகத் தம்பிமாரும்
உமையவள் துரோபதைமகாதேவருஞ் சொல்லவே
உடல்விட்டு வைகுந்தம்போய்
நிலைமையுடன் தர்மரும்வொண்டியாய் வைகுந்தம்
நெடியமால் பாதம்பெற
நிகிரில்லாமாயவன் கருடனையழைத்துமே
நீஎதி ராகுமென்றார்
கலகமதிற்குலந்தனை விமானத்தில் வைத்துடன்
காட்டினார் வைகுந்தமே
கலியுகந்தனிலே அறியவேயனைவர்க்கும்
கண்கண்ட தெய்வமானீர்
வரம்பெறு மடியார்கள் பங்கிலுறைவஞ்சியே
மாதுநீ துரோபதம்மாள்
வர்னக்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே 8

கொத்தளமுங் கொடிகளும் குமரவர்க்கங்களும்
கொக்கரித் தண்டமதிர
கூட்டமிட்டேயொரு பேய்களும் பூதமும்
குறுமுனிவன் பிசாசுபில்லி
விந்தையாஞ் ராட்சத கணங்களும்
விடுபட்ட ராவிரிஷியும்
உந்தன் வீரபண்டாரமும் சாட்டியும் மணிகளும்
காணவே திடுக்கிட்டுதான்
ஓயம்மே ஓயம்மே நோய் போயின னென்று
ஓடுமே கொக்கரித்து
முந்துநீ அடியேனைக் காத்து ரட்ஷித்திடும்
மகாவீர பாஞ்சாலியே
வர்னக்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துமே பக்தியுடன் பாடினே னுன் மீதில்
பராசக்தி துரோபதம்மா
பாஞ்சாலன் கண்ணியே வீரமல் லாரியே
பத்தினி பரமேஸ்வரி
நித்தமுன் பாதமலர் நினைவிலே நினைத்திட
தீர்ந்திடும் பாவங்களம்மா
நீலிபாஞ்சாலி நீ கால கபாலியே
நெடியமால் தங்கையம்மா
உத்தமி துரோபதா நித்யகல்யாணியே
யோங்காரர வீரசக்தி
யுல்லாசகாமிநீ சல்லாபவாணிநீ
யுமையே பாஞ்சாலிகன்னி
வைத்திடும் சித்தமென வல்வினையை நீக்கிடும்
மகாவீர பாஞ்சாலியே
வர்னக்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 10

துரோபதையம்மன் விருத்தம் முற்றிற்று.

உ

# சூர்ய நமஸ்காரப் பதிகம்

## விநாயகர் துதி வெண்பா

மின்னுஞ் சூரியன் மீது மேவுஞ் சிறுபதிகம்
பன்னும்படி எனக்குப் பாவிப்பாய் - துன்னக்
கடவாரணனே காண்பரிய நாரணனே
யிடமாகு முன்முறைத் தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஆசிரிய விருத்தம்

வீதிவெளியாகாசமீதிற் பிரகாசமாய்
மெய்ஞ்ஞான தீபச்சுடராய்
வெளியாகி ஒளியாகி விந்துசுழி முனைமீதில்
விளையாடு மோங்காரமாய்
ஓதுமுகலைந்தெழுத் துபதேசமந்திரம்
உரைக்கின்ற சற்குருவுமாய்
உருவாகிஉயிராகி உயிருக்குளறிவாகி
ஊடாடி நின்ற வுணர்வாய்
ஆதிமுதலான வளரண்டபகிரண்டங்கள்
ஆயிரத்தெட்டுமாகி
அறுநூற்றிருபத்து நாலுபுவனங்களும்
ஆண்டமயமான நிறமாம்
சோதி மயமான பரிபூரணவிலாசமிகு
சூட்சுமரத மீதேறியே
துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர
சூரிய நாராயண சுவாமியே. 1

இன்ப சுகமாகவும் பூமியாகாசமும்
ஏகாந்த வைபோகமும்
ஈரேழுபதினான்கு லோகங்களத்தனையும்
இரட்சிக்கு மீஸ்வரனுமாய்
அம்பரதிகம்பர பரம்பரவநாகத
வநாதியொளியானவெளியாய்
ஆனந்த நடனமிடு முத்தண்டமாகவே
யாடிய சபாபதியுமாய்
வம்பரொடுகாலனெம தூதரணுகாமலே
வந்தருள் புரிந்துநிதமும்
வளர்கின்ற கைலாசபரம பத கொடுமுடியின்
வரையினை வணங்கி முடிவார்
துன்பமெனு நரகவழி விழாமல்ரட்சியுஞ்
சோதிரதமீதேறியே
துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர
சூரிய நாராயண சுவாமியே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்ரமிகு மக்கினி சொரூபவடிவாகிய
யோங்கார ரூபமாகி
ஒளியாகி வெளியாகி யுதயகிரிமீதினில்
உதிக்கின்ற தெய்வமாகிச்
சகலபுவனங்களுந் தானாகிநின்றவொரு
சச்சிதானந்தமயமாய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சகலசூட் சுமதாரியாய்
விக்கிர சிவலிங்கவடி வாகவுமிருந்த சதுர்
வேதாந்த முத்தி முதலாய்
வெகுகோடி காலங்களுன்னையே நம்பினேன்
வேதனே பரநாதனே
சுக்ர கெம்பீரபரி பூரணவிலாசனே
சுயம்பரத மீதேறியே
துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர
சூரிய நாராயண சுவாமியே 3

சாஸ்திர புராணமுதல் வேத வேதாந்தமிகுஞ்
சரிவத்தபோதனர்களுஞ்
சகலமான தேவருஞ் சகலமான முனிவர்களும்
சகலசீவன்களுடனே
நேத்திரமதாகவே சுரியாகி நெறியாகி
நிருமல சொரூபமாகி
நிகழும் சிருஷ்டிதிதி சம்மாரவதிகார
நின்றதிரி மூர்த்தியாகி
காத்திரமதாயைந்து பஞ்சபூதங்களும்
கருணாகடாட்சமுடனே
கண்டுகளி கூர்ந்திடும் விண்ட பரிபூண
கலைக்கியான வேதமுதலே
சூத்திரந்தாவிவிளை யாடுமானந்தச்
சுயம்புரதமீதேறியே
துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர
சூரிய நாராயண சுவாமியே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலாச்ச முசார வாழ்வை நிஜமென்றெண்ணி
நினைவுதடு மாறாமலும்
நிஜரூபமாகவே காட்சிதந்தெனையாண்டு
நியமிக்க விதுசமயமே
அலையாமலீரேழு பதினான்குலோகமு
மணுவுக்கு எணுவாகியே
அரியரப்பிரமாதி யவதாரசிங்கார
வகோரவக்கினி ரூபமாய்
மலையாள கைலாச கிரிகளொடு பரமபதம்
மகமேரு வைகுந்தமும்
வாசமிகுவானதொரு விதியாகாயமதில்
வளரும் பிரகாசவொளியே
தொலையாத சனனமதில் முன்செய்த தீவினை
துயர் தீர ரதமேறியே
துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர
சூரிய நாராயண சுவாமியே. 5

யென்வழிதுறைக ணிலைகளறியாமலே
மனது மிகவே கலங்கி
மாதர்தம் சுகமான வாசைதனை நிஜமென்று
மண்ணுலகிலேயலைந்து
பழியென்ற தீவினை யகற்றிவிடுமுன்பாதம்
பணியவே யருளுமில்லான்
பாழுமென் மனங்குவிய ஒன்றிதரிதம்பனம்
பண்ணுவ துனக்கருமையோ
விதிஎன்ற கண்ணொளி யாகவேநின் றுவிளை
யாடுமணிரூபமாகி
மேலான செல்வமது தந்தருள் புரிந்திடும்
வேதவேதாந்த முதலே
சுழியென் றமுனைமீதி லோங்காரமானவதி
சூட்சுமரத மீதேறியே
துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர
சூரிய நாராயண சுவாமியே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டதிசை யெட்டேன் பதினாறுகோண
மகண்டதொரு காலமீதில்
ஆகாச மீதில் வெகு சோதிப்பிரரகாசமா
யலங்கார தீச்சுடரே
கட்டமதுவானதொரு கவலையினிதீரவுன்
கருணாகடாட்சமுடனே
கனயோக ஞானமது சேவடி கடந்துநீர்
காத்துரட்சித்தருளவே
இட்டகுலதெய்வம் நீ ரெந்துனவுள்ளத்
திருந்து விளையாடுமவநீ
இன்ப சுகயோகமுஞ் சம்போக யோகமு
மேகாந்தவைபோகமு
துட்டகலிகாலமது வென்னைவந்தணுகாது
துணையாகர தமேறி
துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர
சூரிய நாராயண சுவாமியே. 7

தங்கமுங்கனக கோபுரவிமானமுஞ்
சதுர்வேத மேற்கலந்முந்
தளதளென மின்னவொளியான நவரத்னந்
தரித்தமதி வரிகம்பமும்
அங்கமுறு தாக்கலுறு மனவேகமுங்குதிரை
யாங்கார வோங்காரமா
யைந்தெழுத்தா நின்றமந்தரசொருபமதி
வருணனே சாரதியுமாய்ச்
சங்கமுமென்னுள்ளே வண்டில்கட்டாணியை
தியானமதினா லிருக்குந்
தினந்தினமுமெந்தனிட சிந்தையிலிருந்தள
திகம்பரமுமானபொருளே
துங்கபரிபூரண விலாசவொளியாகவே
சுயம்புரதமீதேறியே
துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர
சூரிய நாராயண சுவாமியே. 8

**சூரிய நமஸ்காரப் பதிகம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆதி மூலப்பத்து.

முடிவு மின்றியே முதலு மாகினாய்
முதலும் மின்றியே வடிவ மாகினாய்
வடிவமின்றியே வண்ண மாகினாய்
வண்ணமின்றி மத்தெண்ண மாகினாய்
படியை உண்டு செம் பவழவாயினால்
பாலை உண்டு நீ பாவை தன்கையால்
அடிபடப் பயந் தழுவதென் செய்வாய்
ஆதிமூலமே ஆதிமூலமே. 1

பெற்ற தாயும் நீ உற்ற தந்தை நீ
பெரிய செல்வம் நீ பெரிய ஞானிநீ
கற்றவித்தை நீ கண்கொளாத நீ
காளிராசனே காளமேகமே
மற்றதேவர்க்கு ஒப்பிலா தவா
மறைகள் போற்றவும் வாகுபுள்ளின் மேல்
அற்ற போது வந்தெம்மையாளுவாய்
ஆதிமூலமே ஆதிமூலமே. 2

பாரதத்தை நீ பொருது வென்றதும்
பஞ்சவர்க்கு நீ தஞ்ச மானதும்
வாரணத்தினால் விழவு தைத்ததும்
வல்லரக்கரைப் பொருது வென்றதும்
காரணத்தினால் அமரர்தாழ் தொழும்
காளிராசனே காளமேகமே
ஆரணத்தினால் அமரர் தாழ்தொழும்
ஆதிமூலமே ஆதிமூலமே. 3

பொன்னு மாகினாய் பொருளுமாகினாய்
பொருளுமாகியே இருளுமாகினாய்
மின்னுமாகினாய் மழையுமாகினாய்
மின்னி அற்றதோர் மேகமாகினாய்
கன்னலாகினாய் அமுதமாகினாய்
காளி ராசனே காளமேகமே
அன்ன வாகனம் தன்னில் ஏறுவாய்
ஆதிமூலமே ஆதிமூலமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையர் வாடியில் பால் குடிப்பதும்
அதிலிருந்த பால் தயிரும் வெண்ணையும்
பிடிபடப்படக் களவு செய்வதும்
பிளைபொறுப்பதும் பூவைமாதர்கள்
கடிமலர்க்கையால் கட்டி மத்துடன்
கன்னிபொற்கயிறு தன்னினால்
அடிபடப் பயந்தழுவ தென் செய்வாய்
ஆதிமூலமே ஆதிமூலமே 5

கன்றெடுத்து நீ கனி எறிந்ததும்
காளிதன்னுடன் வாதாடி நின்றதும்
குன்றெடுத்து நீ மழைதடுத்ததும்
கோலவில்லியே கோயில் நாயகா
கன்று பாலுடன் தயிரும் வெண்ணையும்
களவினால் எடுத் தமுது செய்தவா
அண்டர் பாலுக்கு அழுவ தென் செய்வாய்
ஆதிமூலமே ஆதிமூலமே. 6

ஆவினங்கள் தன் செவி எடுக்கவும்
அரவு புற்றின் மேல் ஏறி ஆடவும்
மானினங்கள் தன் மதிமயங்கவும்
மாறில்லா மரம் துளிர் துளுக்கவும்
தேனின் வண்டுகள் சிறகொதுக்கவும்
தெரிவை மாதர்கள் கரைகள் சோரவும்
ஆலிலைக்குள்ளே குழலை ஊதினாய்
ஆதிமூலமே ஆதிமூலமே 7

பெம்மை ஆயர்தன் குழலை ஊதவும்
குருடர் தேடவும் குளுவு கோர்க்கவும்
வெண்மை ஆயர்கள் நெய்யை நாடியே
வெய்ய கானகம் திரிவதென் செய்வாய்
செம்மை வெண்மை பால் அமுது செய்தவா
செய்ய மேனியும் கரிய மேனியாய்
அம்மை போலே வந்தெம்மை ஆளுவாய்
ஆதிமூலமே ஆதிமூலமே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரஞானமும் தேவுவாயுவும்
பண்ணுமாறைப்பத்திமுத்தியும்
சூரசூரனே சுருதி நாயகா
தொல்லறிந்த மத் தில்லைஐயனே
சாரசாரனே சலகஜீவனே
சக்கிர பாணியே உக்கிரமூர்த்தியே
ஆரபாரமே சூரஞானமே
ஆதிமூலமே ஆதிமூலமே 9

பச்சை மேனியும் பொன்னின் ஆபரணமும்
பங்கயம் தொழ தேவர் போற்றவும்
நச்சரவினில் பள்ளி கொள்வதும்
நல்ல மாய்கையால் மண் அளப்பதும்
கொச்ச ஆயர்கள் குடியிருப்பதும் /கொள்ளை கொள்வதும்
கோலவில்லியே கோயில் நாயகா
அச்சமின்றியே எம்மை வந்துகார்
ஆதிமூலமே ஆதிமூலமே 10

ஒரு தரத்திலே உறி அடுக்கினும்
உறுதியாகவே கயிறு கட்டினும்
அருநிலத்திலே உனை வளர்த்து நான்
அயல் கலத்திலே புகுவ தஞ்சினேன்
வருவதற்கு முன் உறியின் வெண்ணெபால்
வாரி யுண்டு நீ மாயமேன் செய்தாய்
அருவருத்து நின் றழுவதென் செய்வாய்
ஆதிமூலமே ஆதிமூலமே 11

கன்று நின்று வெண் கார் மடுக்கரை
கார்முகக்கரி தன்னை வவ்வவே
அன்று வென்றிரு நின்று ஓலமிட
அஞ்ச லென்னவே தஞ்சமானவா
மன்றலத் தேவி தேவர் போற்றவும்
வாகுபுள்ளின் மேல் ஏறி ஆடவும்
அன்று வந்தாற் போல் இன்று வந்துகார்
ஆதிமூலமே ஆதிமூலமே 12

ஆதிமூலப்பத்து முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கரியமால் நமப்பதிகம்,

## வைகுந்த வாசா நமோ

பத்தனாய்ப் பணிகில்லேன் பாழுக்கே நீரிறைத்துப்
பித்தனாய் வாழந்ததாலே பிழை பல செய்து விட்டேன்
சித்தமே திருத்தியுன் தன் சீரடியார்களோடும்
அத்தனே சேர்த்தாட் கொள்வாய் அண்ணலே கரியமாலே.
1

மண்ணிலே பிறந்து நாயேன் வாழந்த சீர்கெட்ட வாழ்க்கை
எண்ணவே துயரமாகும் எவரிடம் கழைகண் காண்பேன்
பண்ணிய பிழைகள் தாயின் பரிவினால் மன்னித்தென்னை
அண்ணலே உய்யக் கொள்வாய் அருளுடைக்கரியமாலே.
2

தாயன்பு கண்டதில்லைத் தந்தையுமுதவவில்லைச்
சேயனேன் துன்பமெல்லாம் சீறிதராகாண்கிலாயோ
பேயென வாழ்ந்து கெட்டேன் பிறவி வேரறுக்கவல்ல
ஆயனே கருணை செய்யாய் அண்ணலே கரியமாலே.
3

இன்பமென்றேதுமில்லை இந்த மண் வாழ்வு தன்னிற்
துன்பம் வந்துற்ற போதிற் தூயனே யாரை நோவேன்
வன்பு செய் விதியினாலே மதிகெட்டு வெறுப்பும் கொண்டேன்
அன்பு தந்தருள் வேண்டும் அருளுடைக்கரியமாலே.
4

வாழவே முடியாதிங்கே வல்வினை விளைக்கும் துன்பம்
தாழவே விடுவதாமோ தந்தையின் செயலிதாமோ
பாழிலே யழிவிலிந்தப் பழியெலாம் யாருக்கையா
ஆழியாய்க் கருணை செய்யாய் அண்ணலே கரியமாலே.
5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகா நின்தாளன்றி வேறொரு துணையும் வேண்டேன்
உத்தம நெறியைப் பற்ற உள்ளத்தில் ஆசை கொண்டேன்
பித்தனாய் மாற்றும் பண்டைப் பெருவினைத் துயரம் நீக்கி
அத்தனே தடுத்தாட் கொள்வாய் அருளுடைக்கரியமாலே.

6

பண்பிலேன் பரிவுமில்லேன் பற்றுக் கேடேதுமில்லை
அன்பிலேன் அறிவுமில்லேன் அறநெறிசேரதில்லேன்
உண்பது முறங்களாகவுள்ள நாளெல்லாம் சென்றதையா
தென்பெறத் தகுதியுள்ளேன் இரங்குவாய் கரியமாலே.

7

என்னெலாம் கற்றும் நெஞ்சின் ஏக்கத்தை மாற்றொணாது
பின்னம் செய் விதியை நொந்து போதையாய் வாடுகின்றேன்
இன்னுமென் வருமோவென்று ஏங்குமென் அச்சம்தீர்த்து
அன்னையாயிரங்க வேண்டும் அண்ணலே கரியமாலே.

8

சித்தமும் தெளியவில்லேன் திருவருட்துணையும் காணேன்
நித்தமும் நோவும் துன்பம் நிறைவிலாப் பஞ்சம் சூழ்ந்து
எத்துணை முயன்றும் தோல்வி எய்தி நின்றேங்குகின்றேன்
பத்தியாம் நெறியிற் சேர்ப்பாய் பாற்கடற்றுயிலுவோனே.

9

கடமைகள் விதித்துவைத்தாய் கருத்துண்டு அவற்றைச் செய்ய
இடையிலே புகுந்து நின்று இடர் விளைத்திடும் வினையில்
படை பலம் தாங்கில்லேன் பற்றினேன் பரமாநின்றாள்
கடைசி நாளிவையிரங்காய் கண்ணனே கரியமாலே.

10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைமிக்குடையாய் இந்தக் கடையனேன் கவலை நீக்கத்
தருணமீதிரங்கிலாயேந் தமியனேன் தவறிக் கெட்டுப்
பெருநெறிசேரொணாத பேதையாய்ப் போவேன் தூய
அருள்நெறிகாட்டி யாள்வாய் அருளுடைக்கரியமாலே.

11

விதியென வினைகள் வந்து மேவியே வருத்த நாயேன்
மதியிழந்துன்னை வேண்டி வணங்கவும் தவறுகின்றேன்
பதிதனாய் மாளவோ நான்பார்த்துச் சற்றிரங்கி யென்னைக்
கதிதருநெறியிற் சேர்க்கக் கருணை செய் கரியமாலே.

12

ஒப்பிலாப் பெரியோன் நாயேன் உயர்நெறி தவறிநின்று
தப்புகள் செய்து நெஞ்சம் தவிப்பதும் காண்கிலாயோ
கப்பிலா மனத்தார் சேரும் கதியை நானெய்தும் வண்ணம்
அப்பனே கருணை செய்யாய் அண்ணலே கரியமாலே.

13

சாவவோ வாழவோ நான் சதி செயும் வினைத்துன்பத்தால்
ஆவியும் கலங்கி நொந்தேன் அச்சத்தால் மனமும் வெந்தேன்
பாவி நான் செய்வதென்னே பரிவிலையோ என்மீதையா
காவியக்கண்ணா சற்றே கருணை செய் கரியமாலே.

14

கதியேதும் காணகில்லேன் கண்ணனே கடையேனீங்கு
கதியிடைச் சருகேயானேன் நரம்பு தோலெலும் பாலான
பொதியையும் சுமந்து நின்றேன் புத்தியும் பேதலித்தேன்
விதிசெயும் சதிகள் நீக்கி வினையேனை யாள்கரியமாலே.

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிராமப் பதிகம்

கருத்தளிந்து உயிர்கலங்கி கவலைப்பட்டு அடியேனும்
வருத்தமுடனே மறலி வந்து வளைந்து உயிரைக் கொடுப்போமுன்
அருத்தமுடனே அடியேற்க்கு அன்பாய்ப்பெரிய வைகுந்தம்
திருத்தப்பதவி நீ தருவாயே திருமாலே கார் அதிராமா.

1

காலனார்என்மேல் பாசங்கொண்டுகடுக நடந்து வருமுன்னே
கோலமகிழும்உன்பாதம் கொண்டேன் நாயேன் கண்டாயோ
பாலனாகிச்அசோதையர் பாலுண்டதிருபற்பநாபா பண்நாக மதில்
ஆலமுண்ட அரனார் பங்கா அடியேனைக் கார் அரிராமா.

2

கிடாவிலேறிப் பாசங்கொண்டு கிட்டே மறலி வருமுன்னே
தூதர் வந்து தொடராமல் துணையாய் வந்து துயர் தீர்த்து
விடாமலுந்தன் மனதிரங்கி விரைவில் வந்து அடியேற்க்கு
படருகின்ற வைகுந்தப் பதவி தருவாய் அரிராமா.

3

கிளறப்பாயும் கிடாவுதனில் கிலேசமுடனே தான் இயமன்
பாசத்தால் எனைவீசிப் பற்றிப் பிடிக்கவரு முன்னே
ஆளத்துடனே அடியேன்முன் அன்பாய்ப் பதியாம் வைகுந்தம்
நாணிக் கொண்டுநானிருக்க நலமேபுரிவாய் அரிராமா.

4

குதிக்கும்கிடாவின் மீதேறிக்கொடிய பாஷந்தானெடுத்து அதிகம்
பண்ணியமன்தானும்அடியேன் உயிரைக் கொடுப்போ முன்
நீஎதிர்கொண்டே நின்றுஇறைஞ்சி அடியேன் தொழுதிடவே
கதிக்கும்செந்தாமரைக்கழல் போற்றக் கருணை புரிவாய் அரிராமா.

5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்துடனே அந்தகன்றன்கொடியதூதர் வலை கொண்டு
நாட்டம்பண்ணி மறலிஎனை நனைந்துவளைந்து பிடிக்கு முன்னே
காட்டுக்கெருடன்மீதேறிக் கதித்த சங்குசக்கரத்தால்
ஓட்டம் பண்ணி அந்தகனை உகந்தேஎனைக்கார் அரிராமா.

6

கேசவா உனை நாள்தோறும் சிலேச மகற்றிக்கழல் போற்றாமல்
வேசையர்தங்களாசையினால் மெத்த மெலிந்து நலிந்தேனே
ஆசைவெறுத்து அலைந்தேயான் அருங்கானகந் திரிவேனோ
பாசமறுத்துவைகுந்தப் பதவி தருவாய் அரிராமா.

7

கையிற் சங்கு சக்கரமும் கதித்த தண்டு தனிவில்லும்
மேனியிலணிந்த பீதாம்பரமும் மேகநிறமும் துளாய்மாலையும்
ஐயப்படவே அந்தகனை அடித்துத் துரத்தி அடியேனுக்கு
மெய்யிற் களிக்கும் வைகுந்த வீடுதருவாய் அரிராமா.

8

கொடிய பாசம் தண்டுடனே பலகோல வலைகள் கைக்கொண்டு
அடியேன் முன்னே வராமல் அரிஅரி உந்தன் அருளாலே
வடிவாய் வானவருமுய்ய மாபெலியைச் சிறையில் வைத்தோனே
கடிதாய்க் கெருடன் மீதேறிக் காத்தருள் புரிவாய் அரிராமா.

9

கோலம்புனைந்த கிடாஏறிக் கொடிய பாஷம்தானெடுத்து
காலன் என்மேல் அணுகாமல் காத்தருள் புரிவாய் கரியோனே
நீலம் போன்றமேனியனே நித்தம் பணிந்து உன் கழல் போற்ற
சீலம் புனைந்த வைகுந்தம் திருப்பதம் தருவாய் அரிராமா.

10

**அரிராமப் பதிகம் முற்றிற்று.**

## முப்பது சில்லறைக் கோர்வை முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் நா.விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

## ஆக்க தொகுப்பு நூல்கள்:-

| | |
|---|---|
| பிள்ளையார் கதை | -150.00 |
| சிவனுமை திருப்பதிக மாலை | -150.00 |
| தேவார திருமுறை பஞ்புராண கோர்வை | -200.00 |
| திருவாசக தேன் துளிகள் | -100.00 |
| சனிபகவான் தோத்திரப் பாடல் | - 70.00 |
| சித்தர் ஞான வாலைக்கும்மி | -140.00 |
| வைகுந்த மோட்ச மாலை | -100.00 |
| முப்பது சில்லரைக் கோர்வை | [redacted].00 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு-01B
077-6538667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org